விலை சதம் 50

★

பக்கங்கள்— 10

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே அவிட்ஸ்
றிக்கோ பிடா வகைகளுக்கும்
றிக்கோஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

# ஈழநாடு
## வார மலர்
*THE EELA NADU VARAMALAR*

மில்க்வைற் தயாரிப்புக்களுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கொடுக்கும் ஆதரவாகும்.
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.

மலர் 19 | ஐப்பசி 21 | ஜுல்ஹஜ் 23 | ஞாயிற்றுக்கிழமை | [6—11—77] | இதழ் 267

### விமான விபத்தில்

# இந்தியப் பிரதமர் தேசாய் மயிரிழையில் உயிர் தப்பினர்!

## விமானச் சிப்பந்திகள் 5 பேர் பலியாகினர்!!

### பிரதமர் மகனும் காயம்

புதுடில்லி, நவம்பர் 5
இந்திய பிரதமமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் நேற்றிரவு பயணம்செய்த விமானம் விபத்துக்குள்ளாகியதில் 5 விமானச் சிப்பந்திகள் கொல்லப்பட்டனர். ஆனல் திரு தேசாய் எதுவித காயமுமின்றி தெய்வாதீனமாகத் தப்பினர்.

நேற்றிரவு பிரதமமந்திரி திரு. தேசாய் ஆஸாமுக்கு விமானப்படை விமானமொன்றில் பிரயாணம்செய்துகொண்டிருந்தபொழுது விமான எஞ்சினில்கோளாறு ஏற்பட்டதனல் வயல் ஒன்றில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. விமானம் தரையில் மோதிய போது ஏற்பட்ட விபத்தில் 5 விமானச்சிப்பந்திகள் மரணமானர்கள். 25 பிரயாணிகள் காயங்களுக்குள்ளானர்கள். காயமடைந்தவர்களில் பிரதமரின் புதல்வர் கான்பாய் தேசாயும் ஒருவர். அவருக்கு கால் எலும்பு முறிந்துள்ளது.

ஆஸாம் மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்காக ஜோர்ஹாட்டுக்கு பிரதமர் போய்க்கொண்டிருந்தார். விமானம் தரைதட்டி சில நிமிடங்களில் ஆஸாம் மாநில முதலமைச்சர் திரு. சின்ஹாவும் இதர மந்திரிகளும் ஸ்தலத்துக்கு விரைந்து அவதானித்தார்கள். 10 டாக்டர்கள் குழுஒன்று ஸ்தலத்துக்குவிரைந்தது. காயமுற்றவர்கள் ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டனர். திரு. தேசாயும் ஆஸ்பத்திரிக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு எதுவித காயமும் ஏற்படவில்லையென்று டாக்டர்கள் அறிவித்தனர்.

திரு. தேசாய்க்கு சிறுகாயம் ஏற்பட்டிருப்பதாக முன்னர் வந்த செய்திகள் கூறின.

திரு. தேசாயுடன் விமானத்தில் பிரயாணம் செய்த வானெலி, சமாச்சார் நிருபர்கள் எவரும் காயமேற்படாமல் தப்பினர்கள்.



ஜோர்ஹாட்டுக்கு சுமார் 15 மைல் தொலைவில் இந்த விபத்து ஏற்பட்டது.

திரு. தேசாய் காயமின்றி தப்பியதற்காக இந்திய ஜனதிபதி உட்பட பல இந்திய தலைவர்கள் அவருக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளார்கள்.

### சிகரட் விலை 3 சதம் அதிகரிப்பு

கொழும்பு, சனி
சகல விதமான சிகரட்டுக்களின் விலையும் 3சதத்தினல் அதிகரிக்கப்பட்டுள்ளது

சிகரட்புகையிலையின் விலையை 20சதவீதத்தினல் நிதியமைச்சர் அதிகரிக்கும்படி விடுத்த உத்தரவை தொடர்ந்து சிகரட்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது

### றெனிக்கு மேலும் ஒரு அமைச்சு

நிதி அமைச்சர் திரு. றெனி டி மெல் நிதி அமைச்சுடன் திட்ட அமைச்சராகவும் பதவி ஏற்க உள்ளார்.

திட்டமிடல், பொருளாதார அமைச்சை நீக்கி விடுவதென அரசாங்கம் மேற்கொண்ட முடிவை அடுத்தே திரு மெல் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஜனதிபதி முன்னிலையில் நிதி, திட்ட அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்.

ஜனப்நைனம்ரிக்காரும்பிரதிநிதி, திட்ட அமைச்சராக நாளை பதவிப் பிரமாணம் செய்துகொள்வார். (இ)

### புதிய வரவு செலவுத் திட்டத்தில்

## பொருளாதார அபிவிருத்திக்கு முக்கிய இடம் அளிக்கப்படும்

### றெனி டி மெல் அறிவிப்பு

கொழும்பு, சனி
புதிய வரவு-செலவுத் திட்டத்தில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் உற்பத்தி அதிகரிப்புக்கும் முக்கிய இடம் அளிக்கப்படும்.

இவ்வாறு நிதி அமைச்சர் திரு. றெனி டி மெல் இன்று கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் கூறினர்.

மக்கள் வங்கி தலைமைக் காரியாலவத்தில் புதிய வங்கிக் கிளை ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் திரு. றெனி டி மெல் மேலும் கூறியதாவது:-

நாம் எல்லோரும் சுய கௌரவத்துடன் வாழவேண்டுமானல் நாட்டு மக்கள் சகலரும் தியாக உணர்வுடன் நடக்க வேண்டும்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற நிர்வாகச் சீர்கேடு காரணமாக நமது நாட்டுக்கு கிடைக்க இருந்த 2000 கோடி ரூபா வெளிநாட்டு நாணய மாற்று கிடைக்காமல்போய் விட்டது.

**உண்மையான பலன் கிடைக்கவில்லை**

கடந்த ஆண்டில் இலங்கையின் தேயிலை, றப்பர் ஆகியனவற்றுக்கு வெளிநாடுகளில் நல்லவிலை கிடைத்தபோதிலும் அதன் உண்மையான பலன் நாட்டுக்குக் கிடைக்கவில்லை.

கடந்த அரசாங்கம் நாட்டு நலனுக்காகப் பாடுபடாமல் தமது குடும்ப நலனுக்காகவும் சொந்தக்காரர்களுக்காகவுமே பாடுபட்டு வந்தது.

இவ்வைபவத்தில் உணவு, கூட்டுறவு அமைச்சர் திரு எஸ்.பி.ஹேரத் பேசுகையில், கூட்டுறவுத் துறையிலும் உணவுத் திணைக்களத்திலும் வீண்விரயமும் ஊழலும்

(10-ம் பக்கம் பார்க்க)

### இந்திராவுக்கு எதிராக கறுப்பு புறாக்கள்

சென்னை
முன்னுள் பிரதமர் திருமதி காந்தி தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்த போது தி. மு. கழகத்தினர் கறுப்புக் கொடிகளை மாத்திரம் காட்டவில்லை கறுப்பு புறாக்களையும் விண்ணில் பறக்கவிட்டு எதிர்ப்புத்தெரிவித்தார்கள்.

சமாதானத்தை அறிவுறுத்தும் வகையில் வெண் புறாக்களை குடியரசு தின விழாக்களில் பறக்கவிட்டு பழக்கப்பட்டவரான திருமதி காந்திக்கு இந்தக் கறுப்புப் புறாக்களைக்கண்டதும் அதிர்ச்சியாகயிருந்திருக்கும்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இது நடந்தது. புறாக்களுக்கு கறுப்பு வர்ணம் பூசிக் கொண்டுவந்து தி. மு. க. வினர் விமான நிலையத்தில் பறக்க விட்டனர் (செ)

### கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தின் மூலம்

# தமிழ்நாடு அரசைக்கவிழ்க்க முன்பே திட்டமிட்டனராம்

### தி. மு. க. பற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு விளக்கம்

சென்னை, நவ.5
தமிழ்நாடு மானில அரசைக் கவிழ்ப்பதற்கு திராவிடமுன்னேற்றக் சுழகத்தினர் முன் கூட்டியே திட்டம் தீட்டியிருந்தனர் என்று தமிழ்நாடு அரசு மத்தியஅரசுக்கு அறிவித்துள்ளது.

முன்னுள் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த பொழுது கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களை நடத்துவதன் மூலம் தமிழ்நாடு அரசைக் கவிழ்க்க தி. மு. க. வினர் திட்டம் தீட்டியிருந்தனர் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இந்திரா எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது ஏற்பட்ட வன்முறைகளை யடுத்து தி மு.க.தலைவர்களும் தொண்டர்களும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளது குறித்து மத்திய அரசுக்கு தமிழ் நாடு அரசு அளித்துள்ள

(10-ம் பக்கம் பார்க்க)

### அக்டோபர் புரட்சிதின மலர்

நாளை நடைபெறும் சோவியத் அக்டோபர் புரட்சியின் 60-வது நினைவுதினத்தை ஒட்டிய விசேடமலர் உட்பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

# விவசாயத்தில் தன்னிறைவு

மடித்துக்கட்டிய வேட்டி, தலையில் தலைப்பாகை, தோளில் சால்வைத் துண்டு. ஒரு கையில் தார்குச்சு, மறு கையில் கலப்பைமுனை; புன்புறுவலோடும் வெறுங்காலோடும் வயலுக்குள் இறங்கி நாட்டின் பிரதமமந்திரி ஏர்பூட்டி நிலத்தை உழும் காட்சியை பண்டுவஸ்நுவர மக்கள் கடந்த வாரம் நேரில் கண்டார்கள். நேரில் காணாத நம்மில் பலர் பத்திரிகைகளில் வெளிவந்த படங்களில் பார்த்து மகிழ்ந்தோம். இன்னும் சில தினங்களில் இக்காட்சியை தகவல் பகுதியினர் வெளியிடவிருக்கும் சினிமா படத்திலும் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கலாம்.

இம்மாதிரி காட்சிகளை படங்களிலும் பத்திரிகைகளிலும் நாம் பார்ப்பதும் மகிழ்வதும் இது முதல்தடவையல்ல.

நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே நம் தலைவர்கள் பலரும் விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக இம்மாதிரியான விவசாய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும் அதை யொட்டிய படங்கள் வெளி வருவதும் சர்வசாதாரணம்.

அமரர் டட்லிசேனநாயக்கா விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக ஒரு படையையே அமைத்தார்.

கடந்த அரசாங்கப் பிரமுகர்களும் கூட விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக மரம் நாட்டுவிழா சிரமதானம் என்றெல்லாம் நடத்தினார்கள். இம்மாதிரி விழாக்களில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண்போம் என்று சூள்உரைப்பதிலும் கூட அவர்கள் தயங்கியதில்லை.

இருந்தும் இன்னமும் நாம் உணவில் தன்னிறைவுகாணாமல் இருக்கின்றோம்.

பழைய சம்பவங்களை நினைத்துப் பார்க்கையில் இன்று நம பிரதமரும், அரசும்கூட பழைய நடைமுறைகளையே தான்

## பிரதமரின் முன்மாதிரி பயனளிக்குமா?

கடைப்பிடித்திருக்கிறார்கள் என்று சாதாரண மக்கள் எண்ணக்கூடும்.

வாக்குறுதிகள் அளிப்பதும் அவைகளைக் காற்றில் பறக்க விடுவதும் நம் நாட்டுத் தலைவர்களுக்கு கைவந்த கலையாகும். அதே நிலை மீண்டும் ஏற்படுவது இயற்கைதான் என்றாலும் புதிய பிரதமர் அவ்வாறு தம் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிடமாட்டார் என்ற நம்பிக்கையும் ஏற்படாமல் இல்லை.

ஏனென்றால், எந்தப் பிரச்னையையும் புதியகோணத்தில் பார்ப்பதிலும், தர்க்கரீதியாக அணுகுவதிலும் அவர் சமர்த்தர். எனவே தமக்கு முந்திய பிரதமர்களுக்கு ஏற்பட்ட தோல்வியை அவர் எதிர் நோக்கமாட்டார் என்று கருதலாம். ஏற்கனவே பல வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றி விட்டார் குறிப்பாக ஏப்ரல் கிளர்ச்சித் தலைவர்களை விடுவித்ததைக் குறிப்பிடலாம்.

மேலும், பல பிரதமர்களின் கீழ் பணிபுரிந்த அனுபவம் அவருக்குண்டு. அவர்கள் நாட்டின் பிரச்னைகளை அணுகிய முறைகளையும், அவர்களால் இவை தீர்க்கப்படாமல்போனதற்கான காரணங்களையும் அவர் அறிவார். எதிர்க்கட்சியிலிருந்தபோதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் விட்ட தவறுகளையும் உணர்வார். இந்த நிலைமையில் நாட்டின் உணவுப்பிரச்னை முதற்கொண்டு சிறுபான்மை மக்கள் பிரச்னை ஈறாக நடைமுறைச் சாத்தியமானதும் எல்லாருக்கும் திருப்தியளிப்பதுமான முறைகளில் தீர்த்துவைப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

அதனால் பண்டுவஸ்நுவர வயலில் இறங்கி ஏர்பூட்டி உழுதுகாட்டிய பிரதமர், அதனை வெறும் பிரசாரத்துக்காக மாத்திரம் செய்திருப்பார் என்றுகொள்ளமுடியாது.

கலாவெவ ஏரியை நாட்டுக்காக பயன்படுத்தி வெற்றி கண்ட மன்னன் தாதுசேனன்; 'மின்னேரிய தெய்வம்' என்று வணங்கப்படும், மகாசேனன்;

ஒரு சொட்டு நீரையும் மக்கள் நலனுக்குப் பயன்படுத்தாமல் கடலில் போய் கலக்க அனுமதிக்கலாகாது எனக் கூறிய மகாபராக்கிரமபாகு; போன்ற அரசர்கள் பேரையும் புகழையும் பற்றி கருதாமல், நாட்டின் உணவுத் தேவையை பூர்த்திசெய்ய எவ்வாறு வயலில் இறங்கி செயற்பட்டார்களோ அதே உணர்வுடன் தான் புதியபிரதமரும் அன்று திவுலவெவ நெல் வயலில் இறங்கினர் என்று நம்புவோம்.

அவர் பதவிக்காலந்திலை குத்நாட்டின் உணவு தேவை பூர்த்தியாகவேண்டும் என் பதே மக்கள் விருப்பம்.

— 'பேனா'

## கருணாநிதி விடுதலை கோரும் தி.மு.க ஜனதா ஊர்வலத்திற்கு பொலிஸ் அனுமதி

சென்னை, நவ 5

தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதியையும் மற்றும் தி.மு.க தொண்டர்களையும் நிபந்தனையற்ற முறையில் விடுதலைசெய்யுமாறு கோரி தமிழ் நாடு கவர்னரிடம் மகஜர் சமர்ப்பிப்பதற்கு ஊர்வலமாகச்செல்ல தி.மு.க.வும் ஜனதாக் கட்சியும் தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஊர்வலத்திற்கு தமிழக பொலிசார் அனுமதி வழங்கியுள்ளனர்.

ராஜ்பவனுக்கு ஊர்வலமாகச் செல்லும் தி.மு.க. ஜனதா தொண்டர்கள் கவர்னரிடம் சமர்ப்பிக்கும் மகஜரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அசம்பாவிதசம்பவங்கள் குறித்து உயர்மட்ட நீதிவிசாரணை நடத்து மாறும் கோருவர். இதேதினத்தில் சென்னையில் ஜனதாக்கட்சியினர் வேறொரு மௌன ஊர்வலத்தையும் நடத்துவர். (இ)


### விற்பனைக்கு-பலகைப் பெட்டிகள்

எம்மிடம் 2' நீளமும் 1' அகலமும் உள்ள கனதியற்ற பலகைப் பெட்டிகள் விற்பனைக்குண்டு. அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

விற்பனை முகாமையாளர்,
சி. எஸ். கே. ஸ்தாபனம்,
யாழ்ப்பாணம்.
7557

### யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. (உயர்தர) ஏப்ரல் '78 பரீட்சைக்கான துரித மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்: 16ந் திகதி நவம்பர் 1977.
விண்ணப்பக் கடைசித் திகதி: 11ந் திகதி நவம்பர் 1977.
எம் கந்தோரிலுள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

அதிபர்

376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 617.
3-11-1977. 7583

### கல்விச் சாசனம்

கொழும்பு, சனி

கல்வித்தரத்தை உயர்த்து வதற்கென கல்விச் சாசனம் ஒன்று உருவாக்கப்படவிருக்கின்றது.

இதன் நிமித்தம் பாடசாலை ஆசிரியர் பெற்றோர் சங்கங்களும் புனரமைக்கப்படும்.

### முதலாண்டு சிரார்த்தம்

திருமதி இராசம்மா பொன்னம்பலம்



எல்லோர்க்கும் அன்லையாய் விளங்கிய எம் தாயே உமை என்றும் மறவோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாளை கொழும்பில் சிரார்த்தம் நடைபெறுகிறதென் பதைத் தெரிவித்துக்கொள் கிறோம். 7603

## வரி விளம்பரம்

### தேவை

தராதரம் பெற்ற வீணை ஆசிரியை உடனடியாகத் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். அதிபர், வின்ஸ் இசைக்கலைக் கல்லூரி, யாழ்ப்பாணம். 7592

அனுபவமும், திறமையும் வாய்ந்த மனேஜர், உதவி மனேஜர், ஒப்பரேட்டர் ஆகியோர் ஜெஸ்ஸி சினிமா முல்லைத்தீவுக்குத் தேவை. முழு விபரங்களுடன் 12-11-77க்கு முன்னர் படமாளிகை உரிமையாளர் சி. சிவநேசன் அவர்களுடன் நேரில்தொடர்பு கொள்ளவும். 7593

கலர் வேலை செய்யக்கூடிய முதல் தரமான பெயின் மைன்டர், பைண்டர் தேவை, தகைமை, வயது, சம்பளம் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7599 மே/பா ஈழநாடு. யாழ்.நகர். 7599

அச்சக வேலை முழுமையாகத் தெரிந்தவர், வேலை தேடித்தருபவர் (Canvasser) வேலைக்கு தேவைப்படுகிறது. தகைமை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 7598 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 7598

தேநீர்க்கடைக்கு பலகாரம் போடக்கூடிய 'கோக்கி' உடனடியாகத் தேவை. ராஜன் புத்தகசாலை, நல்லூர் மார்க்கட், கல்வியங்காடு. 7569

### சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் (வரையறுத்தது) சுன்னாகம் கேள்வி விளம்பரம்

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கத்தில் 4000-க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. கேள்விப்பத்திரங்கள் 11-11-77 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் மீளளிக்க வைப்புப் பணமாக ரூபா 250/-செலுத்தி காரியாலய வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் வைக்கப்படும் உறைகள் அரக்கு முத்திரை யிடப்பட்டே ஒப்படைக்கப்படல்வேண்டும். 11-11-77-ம் திகதி மாலை 3-00 மணிக்கு நடைபெறும் வியாபார உப சபையில் கேள்விப்பத்திரங்கள் உடைக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்
4-11-77 7594

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கட்டாக்காலிக் கால்நடைகள் பிடிப்பவர் பதவி (தற்காலிகம்)

இம் மன்றத்தின் மராமத்துப் பகுதியில் கட்டாக்காலிக் கால்நடைகள் பிடிப்பவராக கடமை புரிவதற்கு விருப்புள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 15-11-77.

மேலதிக விபரங்களுக்கு மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்புகொள்ளவும்.

க. சிவஞானம்,
மாநகராட்சிமன்ற ஆணையாளர்.
மாநகராட்சிமன்றஅலுவலகம்,
யாழ்ப்பாணம்.
4-11-77. 7595

### தேவை

சாயி றைக்கிளினேர்ஸ் ஸ்தாபனத்திற்கு காலை 7 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை காசாளராகக் கடமையாற்ற காசாளர் ஒருவர் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். சன்லையிற் றைக்கிளினேர்ஸ், ராணி சினிமா அருகாமை, யாழ்ப்பாணம். 7582

### விற்பனைக்கு

பருத்தித்துறை புலோலி கிழக்கு மாதனை நெடுங்கேணி மிசன் பாடசாலைக்கு அருகாமையில் மா, தென்னை முதலிய பயிர்களுடன் உள்ள மூன்றரை பரப்புக் காணியும், இரு அறை குசினி, ஸ்ரோர்றூம் அடங்கியதும், மின்சார, கிணறு வசதிகள் உள்ள வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கந்தன் செல்லையா மாதனை பள்ளிக் கூடத்தடி புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 7585

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மின்சாரம் உட்பட சகல வசதியுடன், கல்வீடு வளவும், 8 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு, விபரங்கட்கு: S. விஸ்வேஸ்வரன், No. 53 கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. 7497

வியாபாரம் உடன் தொடங்கக்கூடிய ஜவுளி வியாபார நிலையம் ஒன்று சகல வசதிகளுடன் கிளிநொச்சித் தொகுதியில் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 7588 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7588

### வாடகைக்கு

நவீன வசதிகளுள்ள விசாலமான வீடு சில வருஷங்களுக்கு சுண்டிக்குளியில், நல்லூரில் வாடகைக்குத் தேவை, தொடர்புகொள்ளவும் 292/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 7563

### வகுப்புக்கள்

பல்மொழிக் கலாநிலையத்தினர் நடாத்தும் ஆங்கில வகுப்புக்கள். ஆரம்பத்தில் இருந்து சனி, ஞாயிறு போயா தினங்களில் மட்டும். வளர்ந்தோர்க்கு: 4 - 5 மணிவரை. சிறுவர்களுக்கு: மாலை 3 - 4 மணிவரை. மாதக் கட்டணம்: ரூபா 10, பதிவுக்கட்டணம்: ரூபா 5. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22, ராமையாச் செட்டியார் லேன், யாழ்ப்பாணம். 7600

### CLASSES

I. C. M. A. Foundation & I. A. A. for May 1978 Courses commence on 12th November. Apply VIMS, 14, Clock Tower Road, Jaffna. 7591

I. C. M. A, (A & B) May 1978 exam. Chartered Preliminary A. C. C. A. Institute of Bankers. Week-end classes Commencing 12-11-77. Time 1-30 P. M. No. 22, Ramiah Chettiar Lane, Hospital Rd, Jaffna Education Centre, Jaffna. 7581


## சிறுவர்தின விழா

காரைநகர், வெள்ளி

காரைநகர் மறுமலர்ச்சி மன்றத்தினர் எதிர் வரும் 11-ந் திகதி மாலை காரைநகர் இந்துக்கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் சிறுவர் தினவிழாவை நடாத்தவுள்ளனர்.

திரு. வே. பத்மநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் சிறுவர் களுக்கான பேச்சுப்போட்டி பாடல் போட்டி என்பனவும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (உ)

## கலாயோகியின் வாழ்க்கையும்பணிகளும் -8

# இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நூல்கள் வெளியிடல்; கலைக்காட்சிகள் நடத்தல்

கலாயோகி இலங்கை அரசாங்கத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தம் 1906-ம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்தது. அதன்பிறகு இலங்கையில் தங்காது இங்கிலாந்து சென்று வசிக்கத் தீர்மானித்தார்கள். இதற்குக் காரணங்கள் சரியாகத் தெரியவில்லை. இலங்கையை விட்டுப் புறப்படுமுன் 1906-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் திகதி இலங்கை ரைம்ஸ் பத்திரிகைக்கு ஒரு பேட்டி கொடுத்தார். அதில் தாம் இலங்கையில் சமூகசீர்திருத்தச்சபைமூலம் செய்த வேலையைப் பற்றியும் இலங்கையின் எதிர்காலம் பற்றியும் பல விஷயங்கள் கூறியுள்ளார். ஆனால் தான் ஏன் இலங்கையை விட்டுப்போகிறேன் என்பது பற்றி ஒன்றும் கூறவில்லை.

கலாயோகி உலோகஆராய்ச்சிப் பதவியில் தொடர்ந்து வேலைசெய்யாமல் விட்டது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. இலங்கையில் இருந்த காலத்தில் படிப்படியாக கலையார்வம் மேலோங்கி விஞ்ஞான ஆராய்ச்சியில் ஆர்வம் குறைந்துவிட்டது. 1906-ம் ஆண்டின் பின்னர் விஞ்ஞானம் பற்றி ஒரு கட்டுரையேதும் எழுதியதாகத் தெரியவில்லை. இவர் இங்கிருந்து போனதற்குக் காரணம் தாம் எழுதிவந்த மத்தியகால சிங்களக் கலை என்னும் நூலைச் செவ்வனே வெளியிடுவதின் பொருட்டாக இருக்கலாம்.

இவர் இங்கிலாந்துக்குத் திரும்புமுன் இந்தியாவில் மூன்றுமாதம் சுற்றுப்பிரயாணஞ்செய்தார்.

கலாயோகி இங்கிலாந்து போய்ச் சேரமுன் இவருக்கு ஒரு வீடு அங்கு தயாராகிக் கொண்டிருந்தது இவ்வீட்டை ஒழுங்குசெய்துகொண்டிருந்தவர் கலாயோகியின் நண்பரான ஆஷ்பி என்பவர். இவர் ஒரு கட்டடக் கலைஞர். இங்கிலாந்தில் தொழிற்புரட்சியின் [Industrial Revolution] விளைவுகளுக்கெதிராக பிரசாரம்செய்துகொண்டிருந்த பேரறிஞர் ரன்சின், கவிஞர் வில்லியம் மொறிஸ் என்பவர்களின் கொள்கைகளைப் பின்பற்றி வாழ்ந்துவந்தவர் ஆவர். ஆனபடியால் கலாயோகிக்கும் இவருக்கும் நட்பேற்பட்டதில் வியப்பில்லை. தொழிற்புரட்சியால் மக்கள் முதலாளிகளுக்கும் யந்திரங்களுக்கும் அடிமைகளாகிவிடுவதோடு, அநேக கைவினைஞர்கள் தங்கள் கைத்திறனையும் இழந்துவருவதைக் கண்ட ரன்சின், மொறிஸ் போன்றவர்கள், கைவினைஞர்களுக்கென சில தாபனங்களை [Guilds] நிறுவினர். அப்படிப்பட்ட ஒரு நிறுவனத்தை தொழிற்புரட்சியால் பாதிக்கப்படாத குளொன்ரர்ஷையர் என்னும் பிரதேசத்தில் ஆஷ்பி நிறுவினர். அந்த நிறுவனத்திலிருந்த எழுபது கைவினைஞர்கள், தளபாடங்கள், ஆபரணங்கள் முதலியவற்றைச் செய்ததோடு புத்தகங்களையும் அச்சிட்டுவந்தனர். இவற்றுக்கு இயந்திரங்கள் உபயோகிக்கப்படவில்லை. எல்லாவேலையும் கையாலேயே செய்யப்பட்டது. இந் நிறுவனத்தில் கலாயோகியும் ஒரு பங்குத்தாரரானுர்.

இந்த நிறுவனத்துக்கருகில் 'புரொட்காம்டன்' என்னுமோர் ஊரிருந்தது. அந்த ஊரில் 17-ம் நூற்றுண்டைச் சேர்ந்த ஒரு சப்பலிருந்தது. அதன் பெயர் ''நோர்மன் கப்பல்'' அந்த வீட்டையே வாங்கி கலாயோகி வசிப்பதற்காக ஆஷ்பி திருத்திக்கொண்டிருந்தார். கலாயோகி 1907-ம் ஆண்டு இளவேனிற்காலத்தில் இவ் வீட்டில் வசிக்கத் தொடங்கினர், அங்கு வசிக்கத் தொடங்கியதும் அவ் வீட்டை தனது இலட்சியங்களுக்குகேற்ப அலங்கரித்தார். தளபாடங்களெல்லாம் ஆஷ்பியின் நிறுவனத்தின் கையால் செய்யப்பட்டவை. திரைச்சீலைகளெல்லாம் கையால் நெசவுசெய்யப்பட்டவை. இவ்

ச. அம்பிகைபாகன்

வீட்டை அலங்கரிக்க உபயோகிக்கப்பட்ட சில பொருள்கள் கண்டியில் உள்ள கைவினைஞர்களால் செய்யப்பட்டவை இவ் வீட்டைச் சுற்றியுள்ள இடமெல்லாம் இயற்கைவனப்புமிகுந்ததாயும் அமைதிநிலவியதாயுமிருந்தது.

கலாயோகியும் அவர் மனைவி எதெலும் நோர்மன் சப்பலைச் சேர்ந்த சில தினங்களில் சகோதரி நிவேதிதை அங்கு சென்று ''இந்தியப் பெண்களின் இலட்சியங்கள்'' என்னும்பொருள்பற்றிப் பேசினர். சகோதரி நிவேதிதை சுவாமி விவேகானந்தரின் உத்தம சிஷ்யை. கலாயோகியைப் போல இவரிடம் இந்தியக் கலை, பண்பாடு முதலியவற்றல் ஆர்வம்கொண்டவர். பின்னர் இருவரும் சேர்ந்து ''இந்து பௌத்த புராணக் கதைகள்'' என்னும் நூலை எழுதினர்.

தனது மத்தியகால சிங்களக் கலை என்னும் நூலை அச்சிடுவதற்கு ஆஷ்பி என்பவருக்குச் சொந்தமான கையால் இயங்கும் யந்திரத்தை 1907-ம் ஆண்டில் வாங்கினர். 1907ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்நூலை அச்சிடத்தொடங்கி 1908-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அச்சிட்டு முடித்தனர். இந் நூலில் காணப்படும் ஐநூற்றுக்கு மேற்பட்ட விளக்கப்படங்கள் கலாயோகியின் மனைவி எதெல் குமாரசுவாமியால் இலங்கையிலிருந்த காலத்தில் எடுக்கப்பட்டவை. சிங்களக் கலையையும் மத்தியகால சிங்கள சமூகத்தின் அமைப்பையும் இந் நூல் நன்கு விளக்குகிறது. இவ் விஷயங்களைவிளக்கி இது போன்ற ஒரு நூல் முன்னும் பின்னும் வெளிவரவில்லை. இந்நூலைக் கொண்டு தொழிற்புரட்சி ஏற்படுமுன் ஐரோப்பாவின் சமுதாயநிலையெவ்வாறு இருந்ததென்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம். இந் நூல் அச்சாகிக்கொண்டிருந்த பதினைந்து மாத காலத்தில் இந்தியக் கைவினைஞர்கள் ''இந்தியக் கலையின் நோக்கங்கள்'' போன்ற பல சிறு பிரசுரங்கள் இவ் அச்சகத்தில் இருந்து வெளிவந்தன.

இங்கிலாந்தில் வசித்துவந்த காலத்தில் சந்தர்ப்பம்வாய்க்கும்போதெல்லாம் இந்திய சுதந்திர இயக்கத்துக்கு தமது ஆதரவைக் கொடுத்துவந்தார். 1908ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் லண்டனில் நடந்த இரண்டு கூட்டங்களில் பங்குபற்றி உரையாற்றினர். முதல்கூட்டம் வங்காளப் பிரிவினைத் தினம் சம்பந்தமானது. லாலாலஜ்பதிராய் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் கலாயோகி பேசினுர். தென்னுபிரிக்காவில் காந்தியடிகள் சிறையிடப்பட்டதை எதிர்த்து நடந்த கூட்டத்தில் சவர்க்கார், பெபின் சந்திரபோஷ் முதலியோருடன் கலாயோகியும் உரையாற்றினுர்.

1908ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் திகதி லண்டனில் நடைபெற்ற இலங்கையர் இராப்போசன விருந்தில் இலங்கை மாணவருக்கு நல்வாழ்த்துக் கூறி கலாயோகி சிறந்த ஓர் உரையாற்றினுர். அவர் ஆற்றிய உரையில் ஒவ்வொரு வரியிலும் அவருடைய இலட்சியங்கள் தொனிப்பதால் அதில் ஒரு பகுதியை இங்கு தருகின்றேன். ''இன்று வெளியிடப்பட்ட மத்தியகால சிங்களக் கலையென்னும் நூலை எழுதுவதற்கும் வெளியிடுவதற்கும் ஆறுவருடகாலமாக என்னுடன் அயராது உழைத்த எனது மனைவி [எதெல் குமாரசுவாமி] இங்கு சமூகம் கொடுக்கமுடியாமைக்கு எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனக்கு இதுபோன்ற விருந்துகளில் பங்குபற்றி பழக்கமில்லை. நான் ஒரு எளிய வாழ்க்கை வாழ்ந்து வருகிறேன். நான் உண்பது தாவர உணவு, நான் மதுபானம் அருந்துவதில்லை. இராப்போசனவிருந்தில் இதுதான் நான் ஆற்றும் முதல் உரை. நீங்கள் இங்கிலாந்துக்கு கல்விகற்க வந்த நோக்கம் சட்டம், வைத்தியம் பொறியியல், விஞ்ஞானம் முதலிய துறைகளில் பட்டம் பெற்று உலகில் முன்னேறுவதற்காகவே. நீங்கள் எவராவது அறிவைப் பெருக்கும் நோக்கத்தோடு வந்ததாகத் தெரியவில்லை 19-ம் நூற்றுண்டில் ஓர் இலங்கைவாசியாவது அறிவு வளர்ச்சிக்கோ அல்லது கலை வளர்ச்சிக்கோ உலகம் போற்றும்முறையில் ஒன்றைச் செய்ததாக நான் கேள்விப்படவில்லை. இலங்கையில் படித்தவர்களிற் பலர் தங்கள் நாட்டின் சரித்திரத்

(6-ம் பக்கம் பார்க்க)




## கட்டை அவிழ்த்துவிட்டால்!

அன்னம் மடிமிசையில்
அயர்ந்து உறங்கினுலும்
முன்னம் செய்வினைகள் — கிளியே, உன்
மூச்சை அடைக்காதோ!

இச்சை எலாம் மறுத்து
ஏகாந்தி யான பின்பும்
நச்சு மனவரவம்-கிளியே
நாளும் துரத்தும்டி.

அஞ்ஞான காட்டினிலே
ஆடி களைத்துவிட்டால்
மெஞ்ஞானம் காண்பதற்கு — கிளியே
மேனி இடந்தருமோ!

ஒட்ட உறவு மில்லை,
ஒதுங்கி நிற்க இடமுமில்லை
கட்டை அவிழ்த்துவிட்டால்-கிளியே
கைலாசம் தெரியாதோ!

—கிளிமொழி சித்தர்

## ஆவியுலகத் தொடர்பு—12

# நோய்களைத் தீர்த்த விதம்

ஒரு சமயம் எங்கள் அண்டை வீட்டுக் குழந்தை ஒன்றுக்கு இரவில் உடல் நிலை சரியில்லாமல் போனது. விளையாடிக்கொண்டிருந்த குழந்தை சோர்வாக அமரஆரம்பித்தது. சிலமணி நேரங்களுக்கெல்லாம் உடல் கொதிக்கஆரம்பித்தது. இரவு முழுவதும் திடீர் திடீர் என அலறி அழ ஆரம்பித்தது. காலையில் டாக்டர் வந்து பார்த்து ஊசி போட்டார். 103 டிகிரி இருந்த காய்ச்சல் சிறிது தணிந்து மீண்டும் உச்சக்கட்டத்தை அடைய ஆரம்பித்தது. மீண்டும் அதனேடு போராடிய டாக்டர்ஏதேனும் பெரியாஸ்பத்திரிக்குச் செல்லுங்கள் என்று கைவிரித்துவிட்டார். குழந்தையின் தாயார் கண்ணீர்வடிக்கஆரம்பித்தார். அவசர நிலையை உணர்ந்து நாங்கள் ஆவிகளிடம் விபரத்தைக் கூறினேம். குழந்தைக்கு அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இப்போதே அதை நீக்குகின்றேம் என்று பதில் வந்தது. அடுத்த மூன்று நிமிடங்களுக்கு பதிலே இல்லை, இதே நேரத்தில்வீட்டினுள்ளே அழுதுகொண்டிருந்தகுழந்தை அழுகையை நிறுத்தியது. (அந்த நிமிடமுதல் திடுக்கிட்டு அழுவது நின்றே விட்டது) பிறகு மீண்டும் தொடர்பு கிடைத்தது. குழந்தையின் அதிர்ச்சியை நீக்கிவிட்டோம், நாங்கள் தரும் விபூதியை ஓம் நமசிவாய நம! என்று சொல்லித் குழந்தையின் உடல்முழுவதும் பூசி சிறிது வாயிலும் போடுங்கள். காய்ச்சல் தணியும் என்று கூறி தட்டில் சிறிது விபூதி எடுத்து அதில் பேனவைப் பிடிக்கச்சொல்லிமீடியம் மூலம் அதில் ஏதோ சக்கரங்களை எழுதினர். அதேபோல் அந்த விபூதியைப் பூசினேம். மறு நிமிடத்தில் இருந்து ஜுரம் தணிய ஆரம்பித்தது.

வி. ரவிச்சந்திரன்

உடல் சூடு வேகமாகத் தணிவதை கைகளாலேயே நன்கு உணரமுடிந்தது. சிலமணி நேரங்களில் ஒன்றும் நடவாதது போல குழந்தை நித்திரையில் ஆழ்ந்தது.

### பெண்ணின் கோளாறு

மற்றொரு சம்பவம்: எங்கள் ஊரிலேயே ஒரு பெண்மணிக்கு ஒரு விசித்திரக் கோளாறு ஏற்பட்டது ஒருநாள் இரவுஇயற்கையின் உந்துதலால்வீட்டிற்கு வெளியில் வரும் அவசியம் ஏற்பட்டது அவருக்கு. வீட்டின் வெளித்திண்ணையில் ஏதோ ஓர் உருவம் இருப்பதைக் கண்டுதிடுக்கிட்டாராம். அவ்வுருவமும் மறைந்து விட்டது. ஆனல் இவருக்கு அதிர்ச்சியில் இலேசாகக் காய்ச்சல் அடித்தது. அத்துடன் ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை கொட்டாவிவர ஆரம்பித்தது. கண்களில் கண்ணீர் வழிந்துகொண்டேஇருந்தது. தூக்கத்தில் இரவு முழுவதும் பிதற்ற ஆரம்பித்தார். மருத்துவரிடம் காண்பித்தனர். காய்ச்சல் நின்றுவிட்டது ஆனல் கொட்டாவியும் கண்ணீரும், வாய் பிதற்றலும் நிற்கவில்லை. மருத்துவராலும் நிறுத்தமுடியவில்லை. இது சில நாட்களாகவே நீடித்தது. ஒருநாள் இப் பெண்மணி எங்களிடம் ஆவிகள் ஏதும் பரிகாரம் செய்வார்களா? என்றுகேட்டார். நாங்களும் ஆவிகளிடம் விஷயத்தைச் சொன்னேம், இது துஷ்ட ஆவிகளின் செயல். நாங்கள் தரும் விபூதியை மூன்று தினங்கள் உபயோகிக்க வேண்டும். மூன்றுதினங்களும் அப்போதைக்குஅப்போதேபுதிதாக விபூதி தருகிறேமென்று கூறி விபூதியில் சக்கரங்கள் எழுதி இஷ்ட தெய்வத்தின் பெயரை 108 முறைஉச்சரித்து அணியச்சொன்னர்கள். முதல் நாள் விபூதியில் வாய் பிதற்றல் நின்றது. இரண்டாம் நாள் விபூதியில் கொட்டாவி நின்றது மூன்றும்நாளில் கண்ணீர் நின்றது.

இதே முறையில் அளித்த விபூதி அணிந்ததில் காவல் துறை அதிகாரி ஒருவரின் மகனை அன்வர் பாஷா என்ற முஸ்லிம் மாணவரின் ஒற்றைத் தலைவலி குணமாகியது. மருத்துவத்தில் குணமாகாத தலைவலி இது.

### விளம்பரம் அல்ல

இந்த நூற்றுண்டில் ஏதோ விபூதிக்குவிளம்பரம்தேடவோ

(6-ம் பக்கம் பார்க்க)

# — சோவியத் தேசிய தினம் —

# அக்டோப

# 60 ஆண்டுகள்

# மகா



கிரெம்ளின் மாளிகை இங்குதான் சோவியத் பாராளுமன்றம் உள்ளது.

## அரசியல் சட்டமும் பெண்கள் உரிமையும்

சோவியத் யூனியனின் முதலாவது அரசியல் சட்டத்தை (1918-ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது) புதிய நகல் அரசியல் சட்டத்தோடு ஒப்பிட முடியாது. ஏனெனில் முதல் அரசியல்சட்டம் அங்கீகரிக்கப்பட்டபின், வாழ்க்கையும் சட்டங்களும் மிகப் பெரும் அளவுக்கு மாறிவிட்டன. ஆனல், இதில் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்ருல், சோஷலிச அரசியல் சட்டத்தின் சிறப்பு அம்சங்களைப் புதிய நகல் அரசியல் சட்டம் பாதுகாத்து அபிவிருத்தி செய்கிறது. நகல் அரசியல் சட்டத்தின் எல்லாவிதிகளும் ஆரம்பகால சோவியத் சட்டங்களில் தோன்றியவையே.

பெரும்பாலான விதிகள் பெண்களைப்பற்றியவை என்று வெளிப்படையாக அறிவிக்கப்படாவிட்டாலும், அவை பெண்களைப்பற்றியவையே. 1918-ம் ஆண்டு அரசியல் சட்டம் ''தொழிலாளருக்கும் ஏழை விவசாயிகளுக்கும் முழுமையான, விரிவான இலவசக் கல்வி'' அளித்தது. நாட்டு மக்களில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களில் 86.3 சதவிகிதம் பேர் பெண்களாக இருந்த நிலையில் இது நிகழ்ந்தது. அரசியல் சட்டத்தின் 64-வது விதி, ஆண், பெண் இருபாலாருக்கும் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தியது. அந்தக் காலத்தில் இது ஒரு பெரிய பரபரப்பூட்டும் விஷயமாகும்.

### லிதியாலிகோவா

1936ம் ஆண்டு அரசியல் சட்டத்தில் பெண்களின் அந்தஸ்தும் உரிமைகளும் முழுமையாகப் பிரதிபலித்தன. சோவியத் யூனியனில் 1930ம் ஆண்டிலேயே வேலையில்லாத் திண்டாட்டம் அகற்றப்பட்டுவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தினுல் அதிகம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் பெண்கள்தான். முதலில் பெண்கள் உட்பட அனைவருக்கும் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் புகுத்தப்பட்டது. சுருங்கச் சொல்வதானுல் பெண்களைத் தாழ்ந்தவர்களாக மதிக்கும் நிலை அறவேஒழிந்தது. பெண்களின் அரசியல், மற்றும் சமூக பொருளாதார உரிமைகளை 1936ம் ஆண்டு அரசியல் சட்டம் உறுதிப்படுத்தியது.

நாற்பது ஆண்டுகளில் பெண்களின் நிலை பெரிதும் மாறுதல் அடைந்தது. இப்பொழுது தேசிய பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் பாதிப்பேர் பெண்கள். முக்கியமாக, தேர்ச்சிபெற்ற தொழில் துறையில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். இப்பொழுது சோவியத் மாணவர்களில் பாதிப்பேர் பெண்கள் என்பது ஒரு சாதனையல்லவா? மற்ருெரு உண்மையும் கவனிக்கத் தக்கது. அதாவது, செகண்டரி கல்வி, விசேஷக் கல்வி அல்லது உயர் கல்விகற்ற தொழிலாளர்களில் பெண்கள் தொகை 59 சதவிகிதமாகும். பல பெண்கள் இப்போது நிர்வாகப் பொறுப்புக்கள்வகிக்கின்றனர். சோவியத் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 475 பேர் பெண்கள், மொத்த உறுப்பினர் தொகையில் இது மூன்றில் ஒரு பங்காகும்.

### ஆண்-பெண் சமஉரிமை

புதிய நகல் அரசியல் சட்டத்தின் 35-வது ஷரத்து ஆண்-பெண் சமஉரிமையை வலியுறுத்துகிறது. ''கல்வி பெறுதலிலும் தொழில் முறையான பயிற்சி பெறுதலிலும், வேலை, சம்பளம், பதவி உயர்வு அடைவதிலும், சமூக அரசியல் கலாசார நடவடிக்கைகளிலும் சமமான வாய்ப்புக்களைப்பெண்களுக்கு அளிப்பதன் மூலமும், அதைப்போலவே, பெண்களின் உழைப்பையும் உடல்நலத்தையும் பாதுகாப்பதற்கு விசேஷ நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமும் தாய்மார்களுக்கும், தாய்மையுற்றுள்ள பெண்மணிகளுக்கும் சம்பளத்துடன் விடுமுறைகள், இதர அனுகூலங்கள் அளிப்பது உட்பட தாய்க்கும் சேய்க்கும் பொருளாயத தார்மிக உதவிக்கு சட்டப் பாதுகாப்பு அளிப்பதன் மூலமும் திருமணமாகாத தாய்மார்களுக்கு அரசாங்க உதவி அளிப்பதன் மூலமும், இந்த உரிமைகள் அமுல் நடத்தப்படுவதற்கு உத்தரவாதம் அளிக்கப்படும்'' என்று அந்த ஷரத்து கூறுகிறது. 1936ம் ஆண்டு அரசியல் சட்டம் இந்த உரிமைகளை இவ்வளவு தெளிவாக வரையறுக்கவில்லை.

நகல் அரசியல் சட்ட ஷரத்துக்களில் பல, திட்டவட்டமாகப் பெண்களைப் பற்றியவையாக இல்லையென்றுலும். அவர்களோடு நேரடித் தொடர்பு உள்ளவையாகும். முன்பு இருந்த வேலைசெய்யும் உரிமையோடு இப்போது ஒரு பிரஜையின்விருப்பம், திறமை, பயிற்சி, கல்வி ஆகியவற்றிற்கு ஏற்ப, தொழிலைத்தேர்ந்தெடுக்கும் உரிமையும் சேர்க்கப்பட்டுள்ளது. ரஷ்ய சமஷ்டியின் 10 தேசிய இனப் பிரதேசங்களில் இப்போது செகண்டரி, மற்றும் உயர் கல்விகற்ற 76,000 பெண் நிபுணர்கள் பணியாற்றுகின்றனர்.

### சோவியத் யூனியனில் ஒரு நாள்
### 1977ல் சோவியத் யூனியனில் நாளாந்த உற்பத்தி

| | |
|---|---|
| மின்சக்தி | 3,1780 லட்சம் கிலோவாட் மணிகள் |
| எண்ணெய் (வாயு உட்பட) | 1,507,000 தொன்கள் |
| இயற்கை வாயு | 9370 லட்சம் கியூபிக் மீ. |
| நிலக்கரி | 2,009,000 தொன்கள் |
| உருக்கு | 417,000 தொன்கள் |
| கனிஜ உரங்கள் (நடைமுறை யூனிட்டுகளில்) | 270,000 தொன்கள் |
| உலோகம் வெட்டும் கருவிகள் | 645 |
| வாகனங்கள் | 5,675 |
| உழவு இயந்திரங்கள் | 1,553 |
| கடதாசி | 14,900,000 தொன்கள் |
| சிமெந்து | 359,000 தொன்கள் |
| சகலவித பப்ரிக்குகள் | 29.20 லட்சம் ச. மீ. |
| பாத அணிகள் (சோடி) | 2,054,000 |
| கைக்கடிகாரம் | 165,000 |
| டெலிவிஷன் பெட்டிகள் | 19,000 |
| குளிர்சாதனப் பெட்டிகள் | 17,000 |

## நூறு மொழிகள் பேசப்

சோவியத் யூனியனின் வரலாற்றில் அக்டோபர் 4ம் திகதி ஓர் அதிர்ஷ்ட நாளாகும். 1957ம் ஆண்டு இதே தினம்தான் பூமியின் முதலாவது செய்மதியின் சமிக்ஞையை உலகம்கேட்டது. இந்தச் செய்மதி சோவியத்மக்களது, கரங்களினுலும் அறிவினுலும் உருவானதே. இருபதாண்டுகளுக்குப் பின்னர், சோவியத் யூனியனின் உயர் அரசாங்க அமைப்பான சுப்ரீம் சோவியத், புதிய சோவியத் அரசியல் சட்டத்தை நிறைவேற்றியது.

சுப்ரீம் சோவியத்தின் கூட்டத் தொடரில் லியோனிட் பிரெஷ்நேவ் உரையாற்றினுர். இந்த நகல் அரசியல் சட்டம் ஜூன் 4ம் திகதி பொதுமக்களுக்கு முன்வைக்கப்பட்ட நாள் தொட்டு, 14 கோடி மக்கள், அதாவது வயது வந்தோரில் ஐந்தில் நான்கு பேர் அரசியல் யாப்பு நகல் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டுள்ளனர் என்று அவர் பிரதிநிதிகளுக்குக் கூறினுர்.

அரசியல் சட்டக் கமிஷனுக்கு ஏறத்தாள 400,000 ஆலோசனைகள் அனுப்பப்பட்டன. நகல் அரசியல் சட்டத்தின் உள்ளடக்கத்தை விருத்தி செய்வதாகவும், சேர்த்துக் கொள்ளலாகவும், முக்கிய ஆணைகளைத் திருத்துவதாகவுமமைந்திருந்தன. இந்த ஆலோசனைகள் மிகக் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு நகல் யாப்பிலிருந்த 173 ஆணைகளில் 110ஐத் திருத்துமாறும் மேலதிகமாக ஒரு ஆணையைச் சேர்க்குமாறும் அர[illegible]ல் சட்டக் கமிஷன் சிபார்சு செய்தது.

இந்த எண்கள்யாவும் சோஷலிஸ ஜனநாயகத்தின் தெளிவான வெளிப்பாடாகும். ஒவ்வொரு சோவியத் பிரஜையும் தனது சொந்தநாட்டின் முழுமையான எஜமானன் என்பதையும் தனது நாட்டில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்விலும் தனக்குப் பொறுப்புள்ளது என்பதை அவன் உணருகிருன் என்பதையும் இது காட்டுகிறது. எனவே அடிப்படைச் சட்டத்தின் ஒவ்வொரு விதியும் லட்சோப லட்சம் மக்களினுல் வாதிக்கப்பட்டன,. திருத்தப்

### எதிர்கால தலைமுறையின் நலனுக்கு

இன்றைய மற்றும் எதிர்காலத் தலைமுறையினரின் நலன்களை முன்னிட்டு, சோவியத்யூனியனில் நிலம், அதனுடைய கனிச்செல்வங்கள், தாவர வளம், விலங்கினம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், விஞ்ஞானரீதியில் ருஜுப்பிக்கப்பட்ட விவேகமான முறையில் பயன்படுத்தவும், காற்று மற்றும் நீர்நிலைகளின் தூய்மையைப் பேணவும், இயற்கைச் செல்வத்தின் இனப்பெருக்கத்திற்கு உத்தரவாதமளிக்கவும், மனிதனுடைய இயற்கைச்சூழலை மேம்படுத்தவும் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சோவியத் அரசியல் சட்டம்
அத்தியாயம் 2, விதி-18

## சகல பிர

# பர் சோஷலிஸ
# கா புரட்சி

# பசப்படும் நாட்டில் பிரஜைகளுக்கும் சமத்துவமான உரிமைகள்!

பட்டன, கெட்டியாக்கப்பட்டன. சுப்ரீம் சோவியத்தின் கூட்டத்தொடரில் உரையாற்றும்போது லியோனிட் பிரெஷ்நேவ் வருமாறு கூறினர். 'சோவியத் மக்கள் அனைவருமே தமது நாட்டின் அடிப்படைச் சட்டத்தை எழுதினர்கள் என்பதை நாம் நம்பிக்கையுடனும் பெருமையுடனும் கூற முடியும்'

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், லட்சோப லட்சம் மக்களைத் தாழ்ந்தவர்களாக, வறுமையுற்றவர்களாக, வாழ்வதில் அர்த்தமில்லா திருப்பவர்களாகத் தள்ளிவைத்திருந்த விதிகளை அக்டோபர்புரட்சி அழித்தொழித்துவிட்டது. அது சகல விதமான அடக்குமுறை, சமுதாய, தேசிய, இனவடிவங்களையும் முற்றுகவே துடைத்தெறிந்துவிட்டது.

### மனித உறவுகளில் ஒருநிலை

ஒரு மனிதன் எந்த விதமான அரசியலமைப்பு உரிமைகளைக் கொண்டிருந்த போதிலும் அவன் இன்னெரு மனிதனுக்காக உழைப்பவனுகவிருந்தால் அவன் சுதந்திரமில்லாதவனே என்று மார்க்ஸ் கூறினர்.

உலகின் பிரதானகளங்கத்தை-நிலங்களில் தனியுடமையை, உற்பத்திச் சக்திகளின் தனியுடைமையை அக்டோபர் புரட்சி முற்றுக அகற்றிவிட்டது. மக்கள் சுரண்டுபவர்களாகவும் சுரண்டப்படுபவர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தமை அகற்றப்பட்டுவிட்டது. வர்க்க இன, தேசிய விரோதம் துடைத்தெறியப்பட்டுவிட்டது. சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே நீதியான உறவுகளை அடிப்படையாகக்

**கென்னடி பிஸா ரெவ்ஸ்கி**

ஆனல் பூர்ஷுவா ஜனநாயகம் இரட்டை வேடங்களைக் கொண்டுள்ளது. செல்வந்தர்களுக்கென்று சில உரிமைகளையும் வறியவர்களுக்கென்று சில உரிமைகளையும்கொண்டுள்ளது

### தனிநபரின் சர்வாம்ச அபிவிருத்தி

''ஒவ்வொருவரின் சுதந்திரமான வளர்ச்சி, எல்லோருடைய சுதந்திரமான வளர்ச்சிக்கு நிபந்தனையாகும்'' என்ற கம்யூனிஸ இலட்சியத்திற்கு ஏற்ப, சோவியத் அரசாங்கம், பிரஜைகள் தம்முடைய ஆக்கபூர்வமான வலிமையையும், ஆற்றல்களையும், திறமைகளையும் வளர்த்து அவற்றைப் பிரயோகிப்பதற்காகவும், தனிநபரின் சர்வாம்ச அபிவிருத்திக்காகவும் எதார்த்தமான சாத்தியக் கூறுகளை விஸ்தரிப்பு செய்யும் குறிக்கோளைக் கடைப்பிடிக்கும்.

சோவியத் அரசியல்சட்டம்
அத்தியாயம்-3, விதி 20

யறையை மார்க்ஸூம் ஏங்கல்ஸூம் தான் தமது கம்யூனிஸ்ட் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் கூறியுள்ளதாவது: 'அனைவரினதும் சுதந்திரமான வளர்ச்சியின் நிலையில்தான் ஒவ்வொரு நபரினதும் சுதந்திரமான வளர்ச்சியுள்ளது. 'கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் இந்த அடிப்படைக் கோட்பாடு புதிய சோவியத் அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

ஒவ்வொரு நபருக்கும் சுதந்திரமான, இணக்கமான வளர்ச்

ஒரு நிலை 'உயர்ந்த' தேசங்களுக்கும் மற்றநிலை 'தாழ்ந்த' தேசங்களுக்கும் பிரயோகிக்கப்படுகின்றன. 'உயர்ந்த இனம்' என்ற தத்துவம் அடிமை வர்த்தகம், காலனியாதிக்கச் சுரண்டல், நாஜிக்களின் அடிமை முகாம்களின் வாயுக்குகைகள் என்பவற்றின் பித்தலாட்டமான விளைவே.

இந்த இரட்டை நிலையை சோஷலிஸம் அழித்தொழித்துவிட்டது. இரண்டாகப் பிரிக்கும் பொருட்களல்ல மக்கள்.


கொண்ட ஒரு புதிய சமுதாயம் வரலாற்றில் முதன் முறையாக நிர்மாணிக்கப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

நீதி என்பதுதான் புதிய சோவியத் அரசியல் யாப்பிலுள்ள சுலோகமாகும். நூறு மொழிகள் பேசப்படும் நாட்டின் சகல பிரஜைகளும் சமத்துவமான உரிமைகளை, சமத்துவமான கடமைகளைக்கொண்டுள்ளனர்.

நீதி என்பதற்கு மிகத் துல்லியமான, பூரணமான வரை

சிக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டால். அந்த சமுதாயத்திலிருந்து, சமூக அச்சத்தை அகற்றி விடலாம். ஒருவர் வேலையை இழந்துவிடக்கூடிய அச்சம், நோய் வாய்ப்பட்டு விடுவோமோ என்ற அச்சம், மருத்துவச் செலவுக்கு ஒருவர் தனது வருவாயிலேயே தங்கியிருக்க வேண்டுமென்ற அச்சம், முதிய காலத்தில் வறுமை குறித்த அச்சம், வாடகை உயர்வினல் வீட்டைவிட்டுத் துரத்தப்படும்

(6-ம் பக்கம் பார்க்க)



ஐரோப்பாவுக்கான ஐ. நா. பொருளாதாரக் கமிஷனின் படி, சோவியத் யூனியனும் இதர சோஷலிஸ நாடுகளும், உலோகவியல் சாதனங்கள். பன்றி இரும்பு, உருக்கு சுழல் சக்கரங்கள், அணு உலைகள், மின் நிலையங்கள், பலவகையான உலோக வேலை இயந்திரக் கருவிகள், இயந்திர விடல் பொருட்கள், சில வகையான போக்குவரத்து வசதிகள், உரவகைகள் .போன்ற பொருட்களின் உற்பத்தித் துறையில் முதலிடம் வகித்து வருகின்றன.

படம்: கிரோவோய்றொக்கிலுள்ள உருக்காலையில் உலகின் மிகப் பெரிய வெடிப்பு உலை. ஜனவரி மாதத்தில் மாத்திரம் இது 300,000 தொன் பன்றி இரும்பை உற்பத்தி செய்தது.
இது மிகப்பெரிய சாதனையாகும்.



சோவியத் அதிபர்
பிரெஷ்னேவ்

### இதர நாடுகளுடனன உறவுகள்

சோவியத்யூனியன் இதர நாடுகளுடன் கொண்டிருக்கும் உறவுகள், பலாத்காரப் பிரயோகத்தையோ அல்லது பயமுறுத்தலையோ பரஸ்பரம் கைவிடுதல்என்ற கோட்பாடு, அரசுரிமை, சமத்துவம், எல்லைகள் மீறவொண்ணுமை, நாடுகளின் பிரதேச ஒருமைப்பாடு, தகராறுகளுக்கு சமாதான

(6ம் பக்கம் பார்க்க)

# சோவியத் ஒன்றியமும் தேசிய இனங்களும்

சோவியத் ஒன்றியம் பல குடியரசுகளைத் தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது. சோவியத் ஒன்றியத்தின் ஆட்சிக்குட்பட்ட எந்தவொருபகுதியிலும் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களைக் காணலாம்.

உதாரணமாக வடகாகஸஸிலுள்ள வட ஒஸெதியன் தன்னுட்சிக் குடியரசில் 100க்கு மேற்பட்ட தேசிய இனங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கிருர்கள். இது ஒரு பிரஜையின் மனித உரிமைகளையும் சமுதாய நிலைபாட்டையும் தெளிவாகக் காட்டவில்லையா?

### சமத்துவமான வாய்ப்புக்கள்

''சோவியத் ஒன்றியத்தின் அளவைப் பார்க்கும்போது நமது குடியரசு மிகச்சிறியது'' என்று கூறுகிருர் வட ஒஸெதியன் தன்னுட்சிக் குடியரசின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுத்தலைவர் ஒலக்பா ஸியேவ். இக்குடியரசின் ஜனத்தொகை 600,000; இதன் விஸ்தீரணம் 8 000 சதுர கி. மி. ஆயினும் சோவியத் அரசியலமைப்பின் கீழ், இதர தன்னுட்சிக்குடியரசுகளைப் போன்ற சோவியத ஒன்றியத்தின் பாராளுமன்றத்திற்குப் 11பிரதிநிதிகளை அனுப்பும் உரிமையைக் கொண்டுள்ளோம் என்று இவர் கூறுகிருர்

சுப்ரீம் சோவியத் முதல் கிராம சோவியத் வரையிலான சோவியத்துக்களின் சகல மட்டங்களிலும், ஒஸெதியன்களையும் ரஷ்யர்களையும் மட்டுமல்ல பத்துக்கு மேற்பட்ட இதர தேசிய இனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் காணமுடியும். சோவியத் ஒன்றியன் ஒரே ஒரு தேசிய இனத்தைச் சார்ந்த நாடல்ல. இதனுல்இவர்களனைவரும் பிரதிநிதிகளாவதற்கான சமத்துவமான வாய்ப்புக்களைக் கொண்டுள்ளனர்.

சமூகவாழ்வின் இதரதுறைகளிலும் சகல தேசிய இனங்களையும் சேர்ந்த பிரஜைகள் சமத்துவமான உரிமைகளை அனுபவிக்கிருர்கள். மக்கள் ஆட்சிமன்றத்திற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேசிய பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளிலும் இவர்கள் பணியாற்றுகிருர்கள்.

இக்குடியரசின் உயர்கல்வி நிலையங்களிலும், ராஜ்ய பல்கலைக்கழகங்களிலும், சுரங்க உலோகவியல், மருத்துவக்கழகங்களிலுமுள்ள மாணவரின் உறுப்பமைவு பல்தேசியஇனங்களையும் உள்ளடக்கியுள்ளது.

சோவியத் ஆண்டுகளில் இக்குடியரசு சாதித்ததும் உருவாக்கியதும், இங்கு வாழும் சகல இனங்களினதும் கூட்டுமுயற்சியினலும், அழைப்பதற்குஅவர்களுக்கிருந்த சமத்துவ உரிமையினலுமே, அத்துடன் தொழில் சமுதாய முன்னேற்றத்தில் அவர்களுக்கிருந்த சமத்துவமான வாய்ப்புக் காரணமாகும்.

### கலப்பு மணங்கள்

குடும்ப உறவுகளில் பரந்த சர்வதேசிய மனப்பான்மைபிரதானபாத்திரத்தை வகிக்கிறது 1970ல் நடைபெற்றசகல யூனியன் ஜனத்தொகைக் கணக்கெடுப்பின்படி சோவியத் ஒன்றியத்தில் இன்று 7,918,502 கலப்புக்குடும்பங்கள் உள்ளன. கலப்புத் திருமணங்கள் மிக வலுமிக்கவையாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் உள்ளன. அத்துடன் ஒரே இனத்தைச் சேர்ந்த தம்பதிகளைக்காட்டிலும் கலப்பினத்தைச் சேர்ந்த தம்பதிகளிடையே திருமண முறிவு ஏற்படுவது குறைவுஎன்பதையும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

### கல்விக்கான உரிமை

சகல இன மக்களும் கல்வி பெறுவதற்கான சமத்துவ உரி

[6-ம் பக்கம் பார்க்க]

### லெனினிஸ சமாதானக் கொள்கை

சோவியத் அரசு லெனினிஸ சமாதானக்கொள்கையை முரணின்றிக் கடைப்பிடிக்கும், மக்களின் பந்தோபஸ்து வலுப்பெறுவதையும், பரந்த சர்வதேச ஒத்துழைப்பையும் ஆதரிக்கும்.

சோவியத் யூனியனில் கம்யூனிஸ நிர்மாணத்திற்குச் சாதகமான சர்வதேச நிலைமைகளுக்கு உத்தரவாதமளிப்பதையும், உலகசோஷலிஸத்தின் நிலைகளைப்பலப்படுத்துவதையும், தேசவிடுதலை சமூகமுன்னேற்றத்திற்காக மக்கள் நடத்தும் போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பதையும், ஆக்கிரமிப்புப் போர்களைத் தடுப்பதையும், வெவ்வேறான சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளின் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை முரணின்றி அமுல்நடத்துவதையும் சோவியத் யூனியன் அயல் நாட்டுக் கொள்கை நோக்கமாய்க் கொண்டிருக்கும்.

சோவியத்யூனியனில் யுத்தப் பிரசாரம் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்படும்.

சோவியத்அரசியல்சட்டம்
அத்தியாயம் 4, விதி-28

## நூறுமொழிகள்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சம், வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பினால், ஒருவர் தனது சேமிப்பை இழந்துவிடும் அச்சம் இவைதான் இந்த சமூக அச்சம்.

மனித உரிமைகள், பூர்ஷ்வா அரசியலமைப்பினுல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளனவே தவிர, நடைமுறையில் உத்தரவாதம் செய்யப்படவில்லை. இவை போலித்தனமான உரிமைகள்.

சோஷலிஸ ஜனநாயகம் மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரகடனப்படுத்தியதோடு மட்டுமல்ல, நடைமுறையிலும் உத்தரவாதம் செய்துள்ளது. 'உறுதிப்படுத்துதல்''உத்தரவாதப்படுத்துதல்' என்ற வார்த்தைகள் சோவியத் யூனியனின் புதிய அரசியல் சட்டத்தில் இதர சொற்களைக் காட்டிலும் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

சோஷலிஸ ஜனநாயகம் அனைத்து மக்களின் ஜனநாயகமாகும். இதன் அர்த்தம் ஒவ்வொரு சோவியத் பிரஜைக்கும் உழைக்கும் உரிமை உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது என்பதே. 1930ல் சோவியத் யூனியன் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துவிட்டது. சமூக சேவைகளின் கோட்பாடாகிய, மருத்துவகவனிப்பு கல்வி, ஓய்வுகால ஊதியம், அலவன்ஸ்கள் ஆகியன அரசினுல் முழுமையாக உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் செலவிலேயே சோவியத் பிரஜைகளுக்கு கல்வியும் மருத்துவக் கவனிப்பும் ஓய்வுகாலவூதியமும் கிடைக்கின்றன. இதற்காக அவர்கள் தமது ஊதியத்தில் எதுவும் கொடுக்கவேண்டியிருப்பதில்லை, எந்தஒரு தட்டு மனைக்கும் ஒரு குடும்பத்துக்கு கொடுக்கமுடிந்த வாடகையே குறிக்கப்பட்டுள்ளது. அரசாங்கமே தனது பிரஜைகளுக்கு இலவசமாக அல்லது ஒருகுடும்பத்தின் வருவாயில் மூன்று சதவீதக் கழிவுடன் இருப்பிட வசதிகளைச் செய்துகொடுக்கிறது. அதிர்ஷ்டவசம சோவியத் மக்களுக்குப் பணவீக்கம் என்ன என்பதே தெரியாது. பல ஆண்டுகளாக விலைகள் உயரவே இல்லை.

அரசியல் சட்டத்தில் 30 ஆணைகளைக்கொண்ட ஓர் அத்தியாயம் முழுவதுமே மனித உரிமைகள், சோவியத் பிரஜைகளின் சுதந்திரங்கள் கடமைகளுடன் சம்பந்தப்பட்டது. அரசும் அதன் நிறுவனங்களும் கூட்டுப்பண்ணைகளும் இந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் உத்தரவாதப்படுத்துவதற்காக லட்சோப லட்சம் ரூபிள்களை செலவுசெய்கின்றன. இந்த ஆண்டில் கல்வி, மருத்துவம், மாணவர்களுக்கான மான்யம் இன்ன பிறவற்றிற்கான 100,00 கோடி ரூபிள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. 20,00 கோடிக்குமதிகமான ரூபிள்கள் வீடமைப்புக்கும், சமூக சேவைகளை விஸ்தரிப்பதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளன, ஒவ்வொரு பிரஜைக்கும் அவனுக்கான வேலைக்காக அரசாங்கம் இலவசமாகப் பயிற்சியளிப்பதுடன் அவனது தராதரங்களை இடையருது விருத்திசெய்வதற்கும் புதிய தொழிலைப்பயிலுவதற்குமான நிலைபாடுகளை உருவாக்குகிறது. எந்தவித நெருக்கடிகள் ஸ்தம்பிதமுமின்றி சீரான பொருளாதார வளர்ச்சியை உத்தரவாதப்படுத்துவதும் பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதத்தைத் துரிதப்படுத்துவதுமே பிரதான அம்சங்களாம். இது, இந்தநூற்றாண்டுக்கால பின்தங்கலை மிகக் குறுகிய காலத்தில் தாண்டிவரவும், மிகு வல்லமை மிக்க தொழில்துறை, விவசாய சக்தியாக மாறவும், வளர்ச்சிபெற்ற சோஷலிஸ சமுதாயமாக, உலகிலேயே மிக நியாயமான சமுதாயமாக உருவாக்கவும் வகை செய்தது.

அக்டோபர் புரட்சியின் 60வது ஆண்டு நிறைவின் முன்னணியில் புதிய சோவியத் அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டதானது மிகப் பெரும் முக்கியத்துவமிக்க சம்பவமாகும். 'நாட்டின் வாழ்வில் இரண்டு பெரும் நிகழ்வுகள் ஏககாலத்தில் நிகழ்கின்றன. அவற்றிற்கிடையிலான தொடர்புகள் ஆழமானவை சோவியத் நாட்டின் அறுபதாண்டுக்கால வளர்ச்சி முழுவதினதும் பொழிப்பாக இப்புதிய சட்டம் உள்ளதென ஒருவர் கூறமுடியும்' என்று லியோனிட் பிரெஷ்நேவ் சுப்ரிம் சோவியத் கூட்டத்தில் கூறினுர்.

1927ம் ஆண்டில் பழையதொரு உலகத்தை நீதியானதொரு வழியில் புனர் நிர்மாணிக்க ஆரம்பித்தபோது, மிகச் சரியான வழியையே தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்பதை அவர்களது சொந்த அனுபவங்களைக் கொண்டு சோவியத் மக்கள் காணமுடியும். இந்த வழியில் புதிய சோவியத் அரசியல் சட்டம் மிகப் பெரியதொரு மைல்கல்லாகும்.

## சோவியத்......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மைகளையும் வாய்ப்புகளையும் கொண்டிருக்கிறுர்கள் மொஸ்தொக் பிராந்தியத்தில் வாழும் மக்கள் மத்தியில் குமிக்ஸ், லெஸ்ஷினியன் இன மக்களையும் காணலாம். இவர்களது கலாசார வளர்ச்சிக்காக இதே இன மக்கள் வாழும் தாகெஸ்தானிலிருந்து அங்கு வெளியான பாட நூல்களும், இலக்கியங்களும் இங்கு கொண்டுவரப்பட்டன. தபாரீடினியன்கள், ஜோர்ஜியர்கள், ஆர்மேனியர்கள், செச்சென்கள், ஆவார்கள். அஸர்பெய்ஜானியர்கள் தமது தாய்மொழிகளில் நூல்களைப் பெற்றுள்ளனர்.

தேசிய சிறுபான்மையினருக்கு பாட நூல்களும் கல்வி உதவிகளும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பிரஜையும் தனது தாய்மொழியில் கல்வி பெறுவதற்கான உரிமையை உத்தரவாதம் செய்வதற்கானசெலவு முழுவதையும் அரசாங்கமே பொறுப்பேற்றுக்கொள்கிறது.

நூறு தேசிய இனங்களுக்கும் ஒரு பொதுவான விதிதான் உண்டு. இதுதான் தேசிய இனப்பிரச்னை சம்பந்தமான கேள்விகளுக்கு நாம் அளிக்கும் பதில்களின் சாராம்சம்.

பூரண சமத்துவமும் தமது மொழி கலாசாரம், தேசிய பாரம்பரியத்தின் கட்டுப்பாடற்ற வளர்ச்சியும் உத்தரவாதம் செய்யப்பட்ட பெரிதும் சிறிதுமான சகல இனமக்களும் வாழுகின்ற ஒருசமுதாயத்தில் எவருமே அடக்கப்பட்டிருப்பதைக் காண முடியாது.

## இதர...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமாய்த்தீர்வுகாணுதல், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை, மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மதித்து நடத்தல், மக்களின் சமத்துவம், தம்முடைய சொந்த கதிப்போக்கைத் தாமே தீர்மானித்துக்கொள்ள அவர்களுக்கு உரிமை ஆகிய கோட்பாடுகள், நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு, அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளிலிருந்தும், சர்வதேசச் சட்டவடிவங்களிலிருந்தும்,சோவியத் யூனியனுல் கையெழுத்திடப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களிலிருந்தும் தோன்றும் பொறுப்புக்கள் நெறிதவறுமல் நிறைவேற்றப் படுதல் முதலியன கடைப்பிடிக்கப் படுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

சோவியத் அரசியல் சட்டம்
அத்தியாயம் 4, விதி-29

பாடசாலை நூலகங்கள்—(3)

# நூல்களைப் பதித்தலும் பதிதலும்

(முன் தொடர்ச்சி)

பிரதான வகுப்பு 600: பிரயோக அறிவியல்; அதன் கீழ் வரும் 9 பிரிவுகளுள் ஒன்று 630: விவசாயம்; இப்பிரிவின் கீழ் வரும் பகுதிகளுள் (631-639) ஒன்று 631: கமம். இப்பகுதியை மேலும் சிறு பகுதிகளாக்கவேண்டிய நிலை ஏற்படின், பின்பற்றப்படவேண்டிய முறையே இங்கு காட்டப்பட்டுள்ளது.

### 2. பொதுவான உப பிரிவுகள்

இப்பிரிவுகள் ஒரு பாடத்தை வகைப்படுத்தப் பின்பற்றப்படும் எண்களையும் தலைப்புகளையும் கொண்டுள்ளன. அவை பின்வருமாறு:

01 தத்துவம்/பொதுக்கோட்பாடுகள், 02 கைநூல்கள்/பாடநூல்கள், 03 அகராதிகள். 04 கட்டுரைகள்/விரிவுரைகள், 05 பருவ வெளியீடுகள்/ஆண்டு மலர்கள், 06 மன்றங்கள்/சங்கங்கள், 07 படிப்பும் படிப்பித்தலும், 08 சேகரிக்கப்பட்ட பொருள்கள், 09 வரலாறு.

### உப பிரிவுகளைப் பிரயோகிக்கும்முறை

உப பிரிவுகளைக் கொண்டு பிரதான பகுப்பிலடங்கும் பாடங்களையோ பகுப்பின் பிரிவுகளில் இடம்பெறும் பாடங்களையோ பிரிவுகளின் பகுதிகளில் வரக்கூடிய பாடங்களையோ வகைப்படுத்தலாம். உதாரணமாக:

1. பிரதான பகுப்பு;

### 200 சமயம்

201 சமயதத்துவம், 202 சமயக் கைநூல்கள், 203 சமய அகராதிகள், 204 சமயக்கட்டுரைகள், 205 சமய சஞ்சிகைகள், 206 சமயச் சங்கங்கள், 207 சமயம் கற்பித்தல், 208 சேகரிக்கப்பட்ட சமய சம்பந்தமான பொருள்கள்/விடயங்கள், 209 சமய வரலாறு.

2. பிரதான பிரிவு:

**கவிஞர் வி. கந்தவனம்**

### 510 கணிதவியல்

510.1 கணிதவியற் கோட்பாடுகள், 510 2 கணிவியற் கைநூல்கள். 510.3 கணிதவியல் அகராதிகள், 510.4 கணிதவியற் கட்டுரைகள், 510.5 கணிதவியற் சஞ்சிகைகள், 510.6 கணிதவியற் சங்கங்கள், 510.7 கணிதம் கற்பித்தல், 510.8 கணிதம் பற்றிய விடயங்கள் சேகரிப்பு, 510.9 கணிதவியல் வரலாறு

### (ஊ) மொழி எண்கள்

பிரதான பகுப்பு 400க்-கும் 800-க்கும் பொதுவாகப் பிரயோகிக்கப்படும் மொழி எண்கள் பின்வருமாறு:

2 ஆங்கிலம், 3 யேமன், 4 பிரெஞ்சு, 5 இத்தாலியமொழி 6 இஸ்பானிய மொழி, 7 இலத்தீன், 8 கிரேக்கமொழி, 9 பிறமொழிகள்.

இவை பின்வருமாறு பிரயோகிக்கப்படுகின்றன

420 ஆங்கில மொழி, 8.0 ஆங்கில இலக்கியம், 822 ஆங்கில நாடகங்கள், 430 யேமன் மொழி, 433 யேமன் அகராதி, 830 யேமன் இலக்கியம்; 470 இலத்தீன் மொழி, 475 இலத்தீன் இலக்கணம், 870 இலத்தீன் இலக்கியம்.

### (எ) புவியியல் எண்கள்

பிரதானமாகப் பகுப்பு 900-ல் பயன்படுத்தப்படும் கண்டங்களுக்குரிய எண்கள் புவியியல் எண்கள் எனப்படும். அவை பின்வருமாறு:

4 ஐரோப்பா, 5 ஆசியா, 6 ஆபிரிக்கா, 7 வட அமெரிக்கா, 8 தென் அமெரிக்கா, 9 ஓசியானு, முசாவுப் பிரதேசங்கள் முதலியன.

இவை பிரயோகிக்கப்படும் முறையினைக் காட்டுப் உதாரணம்:

940 ஐரோப்பாவின் வரலாறு, 942 இங்கிலாந்தின் வரலாறு, 973 ஐக்கிய அமெரிக்காவின் வரலாறு, 910 பொதுவான பிரயாணம், 914 ஐரோப்பாவில் பிரயாணம், 914 2 இங்கிலாந்தில் பிரயாணம், 917.3 ஐக்கிய அமெரிக்காவில் பிரயாணம்.

## இங்கிலாந்திலும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தையோ பண்பாட்டையோ அறியாதவர்களாய் காணப்படுகின்றனர். இலங்கையின் பண்டைப் பெருமைக்குக் காரணமென்ன? இந்தியாவொடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததல்லவோ காரணம். இந்தியா கீழைத்தேசங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவிருந்துவந்திருக்கிறது. இந்திய சுதந்திர இயக்கத்தில் அக்கறையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நீங்கள் மேல் நாட்டாரை பின்பற்றினுல் உங்களை ஒருவரும் மதிக்க மாட்டார்கள். இலங்கையின் நிர்வாகம் இலங்கையர் சைவ சமயத்தால்தான் இலங்கை முன்னேறமுடியும். ஆகையால் நாட்டுச்சுதந்திரத்துக்காக நீங்கள் உழைக்கவேண்டும்.

நான் இப்பொழுதும் ஒ மாணவனுகவே இருக்கிறேன். இங்கு கூடியிருக்கும் மாணவரெல்லாரும் என்னை உங்களில் ஒருவனுக கருதவேண்டுமென்பதே எனது பெரு விருப்பம்''

[வரும்]

## நோய்களை .....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது மருத்துவத்தை பழித்துச் சொல்லவோ இதை எழுதவில்லை. இந்த விஞ்ஞான யுகத்திலும் நமது அறிவுக்கு அப்பாற்பட்ட சில விஷயங்கள் நடப்பதாக நாங்கள் அறிந்ததை உங்களுக்கும் தெரிவித்தோம் அவ்வளவே.

இதைப் படிக்கும்போது பலருக்குப் பலவிதமானஅபிப்பிராயங்கள் தோன்றலாம். ஆவிகள் இவர்கள் மூலம்தான் நோய்களைத்தீர்க்குமா? எல்லா மீடியங்கள் மூலமாகவும் தீர்ப்பதுண்டா? என்று சிலர் கேட்கலாம். மேல் நாடுகளில் ஆவியுலக ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகள் ஆவிகளால் நோய்களைத் தீர்க்க முடியும் என்று ஒப்புக் கொள்கிறுர்களா? என்று சிலர் சந்தேகப்படலாம். நோய் ஏற்பட்டால் டாக்டரிடம் காட்டி வைத்தியம் செய்து கொண்டால்தான் குணம் உண்டாகும். ஆவிகளால் என்ன செய்துவிடமுடியும் என்று சிலர் எதிர்வாதம் செய்யலாம். இவர்களது சந்தேகங்களைப் போக்கும் வண்ணம் மேல் நாட்டு சம்பவங்கள் சிலவற்றைத் தெரிவிக்கிறேன்.

ரொடீஷியாவைச் சேர்ந்த நான்கூச் என்ற விஞ்ஞானியின் மனைவிக்கு பாரிசவாயு ஏற்பட்டு கழுத்தும் தோள்களும் பாதிக்கப்பட்டன. இதனுல் இவர் தன் இரு கைகளின் செயல்திறனையும் இழந்துவிட்டார். கைகள் உணர்ச்சியற்று மரக்கட்டைபோல்தொங்கின. டாக்டர்கள் இவருக்குஅறுவை சிகிச்சை செய்ய விரும்பினர். ஆனுல் திருமதி கூச் அறுவை சிகிச்சைக்குப் பயந்தார். ஆவிகள் மூலம் சில மீடியங்கள் நோய்களைத் தீர்ப்பதைக் கேள்விப்பட்டவிஞ்ஞானி தன் மனைவிக்கும் அப்படிச் சிகிச்சை செய்ய விருப்பினுர்.

மேஜர் எட்வேட் ஹேடக் என்ற மீடியம் இவருக்கு சிகிச்சை செய்தார். (மேல் நாடுகளிலும் விபூதி கொடுப்பதுண்டு என்று நினைத்துவிடாதீர்கள். அங்கு நடப்பது வேறு விதம். பிரார்த்தனை அங்கு மிக மிக முக்கியம்.) இரண்டு குழந்தைகளுக்குத் தாயான திருமதி கான் கூச் முதலில் இச்சிகிச்சைக்கு ஒப்புக் கொள்ள மறுத்தார். ஆனுல்மீடியம் எட்வேட் ஹேடக்கைச் சந்தித்துப்பேசிய பிறகு சிகிச்சைக்கு ஒப்புக் கொண்டார். ஓரிரண்டுநாள் சிகிச்சைகளிலேயே அற்புதமான பலன் தெரிந்தது. அவரால் தன்கைகளை அசைக்கவும் மேலே தூக்கவும் முடிந்தது. சிகிச்சை தொடர்ந்தது.

இப்போது இப்பெண்மணி இசைக்கருவிகளை வாசிக்கிறுர். மற்றவர்களுக்கும் இசைப் பயிற்சி அளிக்கிறுர். (இவர் ஒரு இசைப்பயித்தியம்) இவரது மாறுதலைக்கண்டரசாயன விஞ்ஞானி கான் கூச் இப்போது ஆவியுலகத் துறையில் தீவிர ஆராய்ச்சி செய்துவருகிறுர்.


நம்பிக்கையான நவநாகரிக தங்க,வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்

# சோமலதை





அ. செ. மு.

திருவிழா, தேர், தீர்த்தம், கல்யாணம், மருத்துவ மனை என்ற மட்டில் நாம் வெளியே ஏகும் தேவை காரியங்கள்— நம் வீட்டுக்காரரின் வெளிவிவகார நடவடிக்கைகள், அரிதாகத்தானிருந்ததென்றாலும் அந்த மாதிரித் தேவைகளுக்கான வாகன சௌகரியம் மாட்டுவண்டில்தான். அந்தச் சேவையில் எங்கள் குடும்ப புரோகிதமாக நியமனமாகி இருந்தவர் அந்தையா-காளேஸ்வரர் கந்தையா. எப்பவோ நடந்தேறிய தென்னாட்டு ஷேத்திராடனத்தின் ஓர் இனிய நினைவு, பக்தி மார்க்கத்தில் எழுந்த ஒரு சின்னம் தகப்பனர் காளேஸ்வரர் ஆக புதல்வர் கந்தையா ஆனர். அல்லாமல் காளை வண்டிலோடு தன் வாழ்க்கையைப் பிணைத்துக்கொண்டு வண்டிலோட்டியாக இருந்து கந்தையா கோலோச்சினர் என்பதற்காக அல்ல. அது எப்படியிருப்பினும் இவ்விதமாகச் சூடப் பெறும் பெயர் விலாசத்தில் கந்தையாவின் மனம் குளிர்ந்தது என்னவோ மெய்.

பாரம்பரிய சொத்துடமையாகச் சேர்ந்த பெரும் கமப்புலத்துக்கு காளைப் பருவத்தினராயிருந்தபோதே ஏக உரிமையாளராகி அதனை அனுபவிக்கும் பேறும் பெற்றிருந்தார் கந்தையா. மூன்று நான்கு இரட்டைகளை அப்பவும் அவர் பண்ணை ஆட்கள் கட்டி அவிழ்த்தபோதும், தனது தேவைக்கென்று பிரத்தியேகமாக ஓர் ஒற்றைத் திருக்கலை வைத்துக்கொண்டு ஊரும் உலகமும் அளந்தவர் தான். நினைத்த வாக்கில் வண்டிலில் காளையைப் பூட்டிக்கொண்டு தன்னிஷ்டமாகக் கிளம்பினரென்றால் எங்கெல்லாமோ சுற்றியடித்துக் கொண்டு மதியம் திரும்ப வீடு திரும்புவார். அடிக்கடி காங்கேயன் ரேவுத்துறைக்குப் போகும் வேலையிருந்தது. கொழும்புப் பயணகாரருக்காக ரயில்வே ஸ்டேஷன் என்றும் மணியகாரன் கந்தோர், கோடு கச்சேரி என்றும் ஊர் வேலைகளிலே உல்லாசப் பவனி வருவார். கைக்கு வருவதை விட மாட்டார். பெருமை சிறுமை பாராட்டாமல் சமயதருணமாக உதவிப் பலருக்கும் உபகாரியாக நடந்துகொள்வார். இதனல் எல்லாம் தேடிக்கொண்ட நல்லுறவு சத் சங்கம் நட்பு என்பன புடைசூழ்ந்து அணிவகுக்க, கோவில் திருவிழா கல்யாணம் மற்றும் ஊரவர் அயலவர் சுகதுக்கங்களில் எல்லாம் முழுமனமாகக் கலந்துகொள்வார். அவரது கமப்புலச் செய்கையில் அவருக்கு உதவி ஒத்தாசை ஆட்களாக நாலைந்து குடி. அதில் வேலன் இளையவன் குடிசை இதர குடியிருப்புகளுக்குச் சிறிதே அப்பால் விலகி ஒதுக்கமாக இருந்தது. வேலன் இளையவி அவன் மனையாள் மக்களுடனேகூடக் கந்தையனரின் கம்புல வேலைகளில் அவருக்கு எந்நாளும் பெரும் துணை பலமாக இருந்ததுடன் பனை சீவவும் போவான்.

ஊரிலே கந்தையனரின் வசிப்பிடத்திற்கு அண்மித்தாற்போலுள்ள வைரவர் கோவிலில் ஆண்டுக்கொரு பட்சம் பெரும் திருவிழாக்கள் நடைபெறும். காளை கந்தையா அந்த வயதில் கமப்புலக் காரியங்களில் கண்ணுங்கருத்துமாயிருந்த நாளில் ஒரு தினம் இராத் திருவிழா பார்க்கப் போய், திருவிழாவில் நாட்டியமாடிய நடன மகளிர் ஊட்டிய மோகலாக்கிரியும் அத்துடன் விடிய விடியக் கண் விழித்த கிறக்கமுமாய் நிலம் தெளிந்து பொழுது விடிகிற சமயம் வீடு திரும்பி அவருக்கென்று காத்திருந்த பனை அமுதத்தைப் பருகியபோது மது மயக்கம் கட்டு மீறி வரம்புடைத்து எழுந்து பொங்கிப் பிரவாகித்ததன் வினையாகத் தடம்புரண்டு இடறி விழுந்து பெரும் அவலப்பட்டார். அது தான் கதை. அதனை அவர் வாயால் கேட்கவேண்டும், அங்குதான் சுவை.

''அன்று முதலாக என் வாழ்க்கைப் படகே புதிய திசை திருப்பத்திற்குள்ளாயிற்றடா, தம்பி!'' என்பார். ஆனல் அந்தக் கதையை எல்லா நாளும் சொல்லமாட்டார். எல்லாரிடமும் சொல்ல மாட்டார். எப்பொழுதாவது மிக அபூர்வமாகவே அது அவர் வாய்மொழியாக வெளிவந்து கேட்பவர்களின் இதய தந்திகளை மீட்டும்.

''தம்பி, வானம் பார்த்த இப்பூமியிற் பிறந்தவன் பனை ஓலைக் கூரையின் நிழலில் பனை ஓலைப் பாயில் படுத்துறங்கி எழவேண்டும். ஒடியல்மாப் பிட்டு அவித்துச் சாப்பிட வேண்டும். ஒடியல் கூழ் காய்ச்சிக் குடிக்கவேண்டும். பாணிப் பனாட்டுடனே பழைய சோறு சாப்பிடவேண்டும். பனை ஓலையால் வீட்டைச் சுற்றிக் கச்சிதமாக வேலி அமைக்கத் தெரிந்திருக்கவேணும். பனங் கருப்பட்டியும் கல்கண்டும் காய்ச்சி அதன் தித்திப்பு உலகில் வேறெந்தச் சுவைக்கும் நிகரற்றது என்ற சுவை உணர்வில் கட்டுண்டு திளைக்க நமது நாவை வசப்படுத்தியிருக்கவேண்டும். பனம்பழத்தின் வாசனை நாசித் துவாரத்தை எப்படித் துளைத்துச் செல்கிறது பார்! பனை மரங்கள் ஒவ்வொன்றும் குளுகுளு என்று என்ன உல்லாசமாகக் கண் முன்னே காற்றிலே அசைந்தாடி நிற்கிறது பார்! பனைத் தோப்பு பூம்பொழில் சோலையாக —அட பார், என்ன பசுமை! என்ன பசுமை! இதையெல்லாம் அனுபவிக்கமாட்டாதவனை, இவ்வளவு வரப்பிரசாதங்களையும் நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொள்ள உடன்பாடாக இருக்காதவனை யாழ்ப்பாண மண்ணில் பிறந்தவன் என்று நான் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டேன். யாழ்ப்பாணத்தான் என்று இந்த வடபால் பூமாதேவி அவனை ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளமாட்டாள்!''

''காளை கந்தையனர் தனது வண்டில் சாரத்தியஆசனபீடத்திலிருந்து வண்டிலுக்குள்ளே அமர்ந்திருக்கும் ஒருவருடனே இவ்விதமாகப் பேச்சுத்தொடுக்கிறர் என்றல் — அவர் வயிற்றில் அது சமயம் பால் வார்க்கப்பட்டிருக்கிறதென்று நாம் ஊகித்துக் கொள்ளலாம். பெரும்பகுதியும் அது இப்பூமித் தாய் சுரந்த பனம் பாலாகத் தானிருக்கும். இல்லையானல், பச்சைமலை பவளமலையாக நம்மூர் பனைமரங்களை அப்படி நேத்திரானந்தமாக அனுபவிக்கும் 'பட்சிப்பார்வை' அந்தாளுக்கு எப்படிச் சிந்தித்திருக்கக்கூடும்?

வண்டியிலிருப்பவர்களின் வசதி, சௌகர்யத்தை கணித்து அவர்தம் விருப்பு வெறுப்பை அநுசரித்து வண்டி அது போகின்ற பாதையில் நடுநடுவே இரண்டோரிடத்தில் சில நிமிடவேளை தாமதித்து நின்று மறுபடி விர்ரெனக் கிளம்பும். இதற்குப் பிறகு வண்டி ஓட்டத்தின் போது காளை அண்ணரின் பேச்சில் வயிற்றில் வார்த்த பால் கொதித்து அதன் வெம்மை 'டிகிரி' ஏறுவதும் இறங்குவதும் வண்டியுள்ளே இருப்பவர்களின் சகசத்தைப்பொறுத்தது.

## (2)

அன்று ஒருநாள்—

எங்களுக்குப் பள்ளிக்கூடமில்லை. பாடசாலை அதிபர் சடுதி மரணமான துயரமாகப் பள்ளி ஆசிரியர் முழுப்பேரும் அந்தச் சாவுக்குப்போய் விட, பள்ளிக்கூட வாயிலை அன்று ஒருநாள் திறக்காமலே மூடிவிட்டார்கள். அதனல், விடியற்காலை எழுந்து கிராமம் விட்டுக் கிராமம் நெடுந்தூரம் வழிநடந்த நாம் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு போனவழியே திரும்பினேம். எதிர்பார்த்திருக்காதபடி வழியில் பள்ளிக்கூடத்துக்கு மிக அருகாமையிலேயே காளை அண்ணர் வண்டிலோடு தோற்றமானர். வெற்றிலைச் சரைக்குள் வைத்திருந்த புகையிலையைக் காற்றுத் தூக்கி வீசிவிட, அதைத்தேடி எடுப்பதற்காக வண்டிலை நிறுத்தியவர், பள்ளிச்சிறர் கூட்டத்தை எதிரே கண்டதும் காளை ஓச்சும் கம்பை நீட்டி என்னைத் தன்பால் வரவழைத்தார். ''விடியற்காலை பனிநீர் கூடவற்ற முன்னமாய் எழுந்து பறந்தடித்து ஓடிவருவீயளே, ஏன் இன்றைக்குப் பள்ளிக்கூடமில்லையோ?'' என்று வினவியவரின் கைக்கம்பு ஆணை காட்டிய பிரகாரம், காற்று தெருவோரமாகக் கொண்டு போய் வீசிய துண்டுப் புகையிலையை தேடி எடுத்து அவரிடம் தந்து, ''பள்ளிக்கூட அதிபர் காலமாகிவிட்டாராம் கந்தையாண்ணே! அதற்காக இன்றைக்கு பள்ளிக்கூடம் விடுமுறை, எங்கள் பள்ளி ஆசிரியர்கள் முழுப்பேரும் சாவீட்டுக்குப் போய்விட்டார்கள்'' என்று சொல்லி சும்மா நின்றேன். அந்த துயரச் சம்பவத்தில் நம்முடனே தானும் பங்கு கொள்ளும் மனஒன்றுபாடாக, ''ஓ! அந்தாளும் மோசம் போட்டுதோ! தரும சிந்தையுடனே அந்தாளைப் போலப் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு இனி ஒருவர் பிறக்க வேணும்!'' என அநுதாப வாக்கு மொழிந்து அதன்பின் வண்டிலில் ஏறிஉட்கார எனக்கும் மனமுவந்து, காளையை மேலே தட்டிவிட்டார். பள்ளித் தோழரான மற்றப்பிள்ளைகள் எங்கள் வீட்டுக்குத் தெரியப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையில் அன்று பகல் முழுநாளும் கந்தையா அண்ணர்கூட ஊர் சுற்றினேன், பொழுது இருள்படுகின்ற சமயமாக வண்டில் கீரிமலையை அண்மித்திருந்த பனை ஊர் குடியிருப்பொன்றில் கடைசித்தரிப்பாக சிலவேளை நின்று பின் எங்கள் ஊர்த் திசைக்குத் திரும்பலாயிற்று. ஆடுஊசலமாகத் தள்ளாடித் தடம் புரண்டுவந்து ஆசன பீடத்தைக்கைப்பற்றியகந்தையாண்ணர் இப்பொழுது தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு தன்னைமறந்த தவசியாய்-உலகத்தை வெறுத்த பரதேசியாய் வாய் மூடி கண்மூடி மௌன உறக்கத்தில் ஆழ்ந்து போகிறர். வண்டி சிறிது தூரம் கடகடவென்று உருண்டோடி அதன்பின் வேகம் தணிந்து மெல்ல அசைகிறது. 'நிறைகலம் இனி வீடுபோய்ச் சேருமட்டும் இதே நிலைதான்' என்று மனதுக்குள்ளாகக் கணித்துக் கொண்டு ''நாணயக் கயிற்றை என் கையில் கொடுத்துவிட்டு உள்ளேதள்ளியிருங்கோ கந்தையாண்ணே!'' என்றேன்.

''சேசே! அதைப்பற்றி ஒன்றும் யோசிக்காதேடா தம்பி. நீ உன் பாட்டில் பேசாமலிரு மயிலை எங்களிருபேரையும் பத்திரமாக வீடுகொண்டுபோய்ச் சேர்க்கும். எப்பொழுதாவது மனங்கேளாமல் கொஞ்சம் அதிகப்படியாக வார்த்துவிட்டேனேயானல் என் நிலை இப்படித்தான்!'' — அயர்ந்திருந்தார் போல மெல்ல மெல்லத் தலைநிமிர்கிறது. வாயில் பேச்சுப்பிறக்கிறது. தடுமாற்றமில்லாத பேச்சு, நெஞ்சத்தின் ஆழத்தில் குமிழிட்டு ஊற்றெடுக்கும் நினைவுகள், பழைய நினைவுகள். புதையல் எடுத்த தனம் நமக்கு.

''வண்டில்காரர் கந்தையாண்ணை என்ற மட்டில்தான் என்னை நீ தெரிந்துகொண்டிருக்கிறய். நானும் உன்னைப் போல ஒரு காலத்தில் சிறுவனக, பள்ளி மாணவனக அதன் பின் கட்டிளம் காளைப் பருவத்தினனக இருந்து வசந்தம் கோடைமாரி எல்லாம் கண்டு அனுபவித்தவன்தான். வாலிபப் பராயத்திலே என் நிமிர்ந்த தோள்களும் புயபலமும் ஊரிலே பலபேரின் கவனத்தை ஈர்த்த கவர்ச்சி அம்சமாயிருந்தன. கண்வைத்துக் காத்திருந்தோர் பலபேர். நானே கொம்பன் காளையாக வால் முறுக்கித்திரிந்தேன். கொம்புமுறித்து என் கொட்டம் அடக்கயாரும் என்னை அணுகாதபடி விழிப்பாயிருந்தேன். சுதந்திரப் பறவையாய் அவ்விதமாக வாழ்க்கையை அநுபவித்துக்கொண்டிருந்த நாளில்தான் அந்த அவலம் சம்பவித்தது''

என்னைத் திகைப்பிலும் வியப்பிலும் ஆழ்த்தி வைத்து கந்தையாண்ணர் தொடர்ந்து பேசுகிறர்.

''வைரவர் கோவில் கொடியேறிவிட்டதென்றல் எனக்குப் பெருமகிழ்ச்சி. வேறெந்தக் கோயிலிலே அத்தனை கூட்டம். மேளங்களும் ஆடல்பாடலும் அப்படி சனசமுத்திரத்தைச் சேர்க்கிறது? என் 'இரட்டை' அந்தப் பட்சம் திருவிழா முழு நாட்களும் ஏறுபடி மேளகாரரையும் சின்னமேளகாரரையும் ஏற்றிச் சுமந்து ஓடித்திரிந்தபடி கோவிலடியிலேதான் நிற்கும். பகல் திருவிழா இராத் திருவிழா ஒன்றும் தப்பவிடாமல் பார்ப்பேன். அன்றைக்கும் இராத்திருவிழாவுக்குப் போக வீட்டுப்படலை தாண்டி வெளியே கால்வைத்தபோது வழமைப்படி வேலன் இளையவனைக் கூப்பிட்டுச் சொல்லி விட்டுப்போனேன். விடியற்காலை நிலம் தெளிவதற்கு முன்னமாய் அவன் பனை ஏறப் போவான். இரண்டு கலசம் நுங்கும் நுரையுமாக பொங்கி வழிய செல்லப்பர் வீட்டுமாட்டுக் கொட்டிலில் என்னைக்காத்திருக்கும். இராமுழுக்கக் கண் விழித்து அந்தந்த திருவிழா உபயகாரருக்காகச் சில பல உதவிகளும் செய்து கொடுத்து நாலுவீதியும் ஓடித்திரிந்த அயர்வும் ஆயாசமும் அங்கு அவ்விரு கலசங்களையும் பார்த்த மாத்திரத்தே பறந்தோடிப்போகும். அந்நேரம் அவை அமுத கலசங்களாக புத்தெழுச்சி ஊட்டி பின் இனிதாகக் கண் உறக்கத்தில் ஆழ்த்திவிடும்.

அன்றைக்குத் திருவிழாவில் நடனமாடிய சின்னமேளம் அந்நாளில் யாழ்ப்பாணத்தில் பெரும்புகழ் பரப்பிப்பிரகாசித்த ஜோடி. ஆட்டம்,பாட்டு, அழகுறு தோற்றம் ஆகிய மூன்று அம்சங்களும் மூவர்ணமாகக் கவர்ந்தொளிர, சென்றவிடமெல்லாம் பல்லாயிரம்பேரைத் தம் வசப்படுத்தினர்கள்.

'சுவாமி, வடக்குவீதி தவில் சமா முடிவெய்தி ஈசானம் திரும்ப, மெல்லக் கலையும் திருவிழாக்கூட்டத்தில் கலந்து என்வழிதிரும்பிய நான், நாட்டிய மகளிரின் ரூபலாவண்யம் இன்னமும் கண்ணுக்குள்ளே நிழலாட, அவர்கள் பாடிய பாட்டு ஒன்றினை வாயில்சீட்டி அடித்துக்கொண்டு கனவுலகில் மிதந்தோடி வந்து நேரே செல்லப்பர் வீட்டு மாட்டுக்கொட்டிலை நாடினேன். அப்பொழுது தான் செல்லப்பரின் பொடிச்சி ஒரு கலசத்தைக் கொணர்ந்து வைத்துவிட்டு மெல்ல மறைந்ததை அந்த மங்கியநிலவொளியிலும் என் கண்கள் அவதானித்தன. நிலத்தில் குந்திகூரையில் செருகி வைத்தெடுத்த தெங்குக்குவளையில் கலசத்திலிருந்ததை வார்த்துப்பருகினேன். தித்திக்கும் தேனமுதாகச்சுவைத்தது தருவின்பானம். ஒரே மூச்சாக மூன்றுவது குவளையையும் உறிஞ்சிஇழுத்த போது முன்னெருநாளும் என்னிடத்தே உண்டாகியிருக்காத விநோத உணர்வுகள் திமிர்த்து வீறுற்றெழுந்தன. தெங்குக்குவளை பொற்கிண்ணமாக, நாட்டியமகளிர் அதற்குள்ளே குதித்துக் குரவையாடி நின்றர்கள். காமஞ்சால் இளமை, அவர் தம் கூந்தலில் சூடிய புஷ்பக்கொத்தில், குறுநகையில் வேல்விழி நோக்கில்-ஏன், அங்க அசைவுகள் ஒவ்வொன்றிலுமே, கள் ஒழுகியது... தேன் சிந்தியது...

இரண்டாவது கலசம் வருகிறது. அது என் கண்முன் வைக்கப்படுகிறது.

''ஓ! நீயா! இராத்திரி உன்னைப் பார்த்தேனே! சுமந்து கொணர்ந்த உன் நல்ல கைகளால் அப்படியே சரித்துவிடு. வெகுநேரம் காத்திருக்க வைத்துவிட்டாய். இராத்திரி ஒரு கண் உறக்கமில்லை. ஒரு நிமிடம் ஓய்ந்திருக்கவில்லை.''

...அமுதகலசம் கொணர்ந்த அந்த சோமலதையிடம் இந்த விதமாக என் வாய் உளறிப் 'புசத்தி'யிருக்க, கைகள் அவளிடம் நீட்டிய குவளையில் கலசம் ஒருக்கால் சரிந்து எழுகிறது. மடமடவென்று உறிஞ்சி இழுத்துவிட்டு மறுதடவையும் நீட்டினேன். அவள் நின்றநிலை பெயராமல் வைத்த அடி எடுக்காமல் மணிவளை கிளுகிளுக்க வாயுதட்டில் விழியோரத்திலும் கூட போதவிழும் அதே மென்னகை நெளிந்திழைய, கலசத்தை சரித்தனள். இரண்டொரு மிடறு. என் நினைவுகள் சரிந்தன கனவுகள் சரிந்தன, நிலையும் பேறும் சரிந்தது.

வெளியே நிலவு நிற்கிறது. அது ஓடி மறையவில்லை; ''நீயும் கோவிலுக்கு வந்தியோ?''

இரண்டடி பின்னகர்ந்து நீலவானத்தை அண்ணந்து பார்த்து நின்றள். நெற்றியில் சாந்து மினுக்கம் வாரிப்பின்னி

[9-ம் பக்கம் பார்க்க]

# நாவலர் பாரம்பரியத்தைப் பேணிய தமிழ் மகன்

ஆ. சிவநேசச்செல்வன் எம். ஏ. (இலங்கை)
யாழ். வளாகம்

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஆங்கிலக்கல்வி வேகமாகப் பரவிய வேளையில் 'நீறுபூத்த நெருப்புப்போல' விளங்கிய பாரம்பரியத் தமிழ்க் கல்வி மரபைக் காலத்தின்தேவைக்கேற்பத் தமிழ்கூறும்நல்லுலகமெங்கணும் பரவச் செய்யும் பணியிற் பலர் ஈடுபட்டனர். ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை மல்லாகம் கனகசபைப்பிள்ளை, தி. த. கனகசுந்தரம்பிள்ளை, நா. கதிரைவேற்பிள்ளை, கரோல் விஸ்வநாதபிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை என நீண்டு செல்லும் தமிழ்த்தொண்டர் வரிசையில் நாவலர் கோட்டம் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையும் தமது தமிழியற்பணிகளின் சிறப்பால் இணைந்துகொள்கின்ருர். பரந்துபட்ட தமது செயலாண்மைத் திறத்தின் ஆற்றலால் தமது வாழ்க்கைக் காலத்தில் ஆற்றிய பணிகள் சமுதாயத் தேவையை நிறைவுசெய்ததுடன் அக்காலத்தமிழறிஞர் பலரையும் அவர்பால் ஈர்க்க வைத்தது. நாட்டு வரலாற்றைச் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தும் நோக்குடனும் கல்வி மரபை நெறிப்படுத்தும் நோக்குடனும் முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் எழுதிய வரலாற்று நூல்களும், மாணவர்களுக்கேற்ற பாடநூல்களும், அத்துடன் பதிப்பாசிரியமுயற்சிகளும் அவரது நிதானமான பணிகளுக்குச் சான்ருக அமைகின்றன.

முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் மானிப்பாயில் வாழ்ந்த புகழ்பூத்த கல்விப்பரம்பரையினரின் பின்னணியிலேதோன்றியவர். சென்ற நூற்றுண்டுத் தமிழறிஞருள்ஒருவராகிய ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை மருகராகிய இவர் வட இலங்கையின் ஆங்கிலக்கல்விப் பிதாமகருள் ஒருவராகிய பி. எஸ். பாஜ் அவர்களின் மருகருமாவர். இவருடைய தந்தையாராகிய திரு. ஆறுமுகம்பிள்ளை வியாபாரியாயினும் அக்காலத்து மானிப்பாயின் செழித்த கல்விமரபில் ஊறியவர். 1858ஆம் ஆண்டுமானிப்பாயிற் பிறந்த முத்துத்தம்பிப் பிள்ளை தமது ஆரம்பக்கல்வியைத் திரு. பி. எஸ். பாஜ் (P. S. Page) அவர்களிடம் பெற்ருர். இதனைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் திரு. நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளையிடம் கல்விப்பயிற்சி பெற்ருர். 1876ஆம் ஆண்டு முதல் நாவலப்பிட்டியிலே (முன்ஷி) தமிழாசிரியராகக் கடமையாற்றிய பின்னர் 1880 ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்ருர். அங்கு திருத்துறைப்பூண்டி அழகியநாதம் செட்டியாரின் பிள்ளைகளுக்குக் கல்விபோதிக்கும் பணியில் ஈடுபட்டார். சிறிது காலத்தின் பின்னர் நாகபட்டினம் அன்டர்சன் அண்கோ என்ற நிறுவனத்தின் பிரதான லிகிதராக இரு ஆண்டுகள் பணியாற்றினர்.

1884 ஆம் ஆண்டு தரங்கம்பாடியைச்சேர்ந்த தவசிமுத்து நாடார் என்றபெருஞ்செல்வர் நடாத்திய 'சத்தியாபிமானி' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகப்பணியேற்ருர். இக்காலத்திலே 'நாடார்'வகுப்பினரைக் கேவலமாகத்தாக்கி வேருெரு பத்திரிகை நடாத்திய பிரசாரத்திற்கெதிராக முத்துத்தம்பிப்பிள்ளையின் பேனு இயங்கியது. எதிர்ப்பிரசாரம் நடாத்திய பத்திரிகைஆசிரியர் சிறையிலே தள்ளப்பட்டார். முத்துத்தம்பிப் பிள்ளையின் எழுத்து வன்மையையும், ஆற்றலையும் பாராட்டும் வகையில் நாடார் வகுப்பினர் யாவரும் சேர்ந்து பெருந்தொகைப் பணத்தினைச் சன்மானமாகக் கொடுத்தனர்.

இப்பணத்தை மூலதனமாகக் கொண்டு தமிழ்வளர்ச்சிக்கான தொண்டில் ஈடுபட வேண்டும் என்ற தவசிமுத்து நாடாரின் பெரு விருப்பிற்கேற்ப 1885-ம் ஆண்டு சென்னைக்கு வந்த மூத்ததம்பிப்பிள்ளை 'ஜுபிலி அச்சகத்தை ஆரம்பித்து நூல் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார். 1886-ம் ஆண்டு காளிதாசன் வரலாறு என்ற வசன நூலை வடமொழியில் இருந்து மொழிபெயர்த்து வெளியிட்டார். இதே ஆண்டில் 'இலங்கைச் சரித்திர ஆசனம்' என்ற நூலையும் வெளியிட்டார்.

ஏறத்தாள ஒரு தசாப்தத்திற்கு மேலாக இந்தியாவில் வாழ்ந்த பிள்ளையவர்கள் 1893-ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்தார். நாவலர் முதலாக அக்காலத்தில் வாழ்ந்து தமிழ்த் தொண்டும் சமயத் தொண்டும் புரிந்த பலரும் மறைந்த நிலையிலே அந்நிய கலாச்சாரம் ஏற்படுத்திய சீரழிவுகளைக் கண்டார். வண்ணுர்பண்ணையிலே ஆறுமுக நாவலர் வசித்த இல்லத்தை வாங்கி 'நாவலர் கோட்டம்' எனப் பெயரிட்டு அங்கு பணியைத் தொடர்ந்தார். அருகே நாவலர் அச்சகத்தையும் வாட் அன் டேவி என்ற மருத்துவநிறுவனத்தையும் உருவாக்கித் தமது முழுநேரத் தமிழ்ப்பணியை ஆரம்பித்தார். நாவலர் தோற்றுவித்த பாரம்பரியத்தை அழியவிடாது பேணும் வகையில் பிள்ளையவர்களின் பணிகள் அமையலாயின.

சென்ற நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து படிப்படியாக ஏற்பட்டுவந்த சமூக மாற்றமும் கல்வி மரபு மாற்றமும் நாடெங்கும் பல்வகை வளர்ச்சிகளை ஏற்படுத்தின. அச்சுக்கலை வளர்ச்சியின் செல்வாக்கினுல் உருவாகிய நூல் வெளியீட்டு முயற்சிகள், மக்களின் வாசனை ஆர்வத்தை வளர்த்தல், பத்திரிகை வெளியிடுதல் என்றின்னேரன்ன செயல்களில் தமிழறிஞர்கள் ஈடுபட்டனர். அச்சியந்திர செயற்பாட்டை உணர்ந்து முதலில் செயற்பட்டவர் ஆறுமுகநாவலர்.

மிசனரிமார் அச்சியந்திரத்தைச் சமயம்பரப்பும் தேவைக்குப் பயன்படுத்த முற்பட்ட சூழ்நிலையிலே நாடெங்கும் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்துவதைத் தமது பிரதான பணியாகக் கொண்டனர். கல்வியறிவைப் பரப்புவதன் மூலமே மக்களைத் தம்பால் ஈர்க்கமுடியும் என நம்பினர். தமது சமயத் தேவைக்கு உபகாரமான நூல்களையும் துண்டுப்பிரசுரங்களையுமே வெளியிட்டனர். தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார். சுதேசிகள் அச்சியந்திரத்தைப் பயன்படுத்தும் உரிமையும் ஆரம்பத்தில் அரசாங்கத்தால் மறுக்கப்பட்டது. இந்நிலை மாறியதும் ஆறுமுகநாவலர். கிறிஸ்தவ மிஷனரிமார் பயன்படுத்திய அத்தனைமுறைகளையும் தானும் தேவைக்கேற்பப் பயன்படுத்திச் சைவப் பயிரையும், தமிழ்க்கல்வியையும் வளர்க்க முற்பட்டார். நாவலரைப் பின்பற்றி இப் பணியைப் பலரும் மேற்கொண்டனர்.

இயற்றமிழ் போதகாசிரியர் வல்லை வைத்திலிங்கம்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர் போன்ற பலரும் அச்சகங்களைத் தாமே அமைத்து அதன் பின்னணியில் தமது பணிகளைத் தொடரமுற்பட்டனர், நாடெங்கும் வளர்ந்து வந்த கல்வித் தாகத்திற்கு ஏற்ப நூல்வெளிடும் முயற்சியையும்பத்திரிகைகளைநடாத்தி அதன்மூலம் தமது கருத்துக்களை மக்களுக்குப் பரப்பும் முயற்சியிலும் ஒவ்வொரு தமிழறிஞரும் ஈடுபட்டனர். இந்தவகையிலே முத்துத்தம்பிப்பிள்ளையின் தமிழ்ப்பணி காலத்தின் தேவைக்கேற்றதாக அமைந்திருந்தமை அவதானிக்கத்தக்கது.

முத்துத்தம்பிப்பிள்ளையின் கல்வி வாழ்க்கை ஆசிரியப் பணியோடு ஆரம்பித்ததாயினும் பத்திரிகைப் பணியின் மூலமே திறமை தமிழ்கூறும் நல்லுலகிற்கு முதன்முதல் அறிமுகமாகியது. சத்தியாபிமானிப் பத்திரிகையிற்பெற்ற அனுபவமும், செல்வாக்கும், ஜுபிலி அச்சகத்தை உருவாக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாகவே யாழ்ப்பாணத்தில் அமைத்த நாவலர் அச்சகமும், புத்தகசாலையும் உருவாக்கப்பட்டன. இங்கிருந்து வெளியிடப்பட்ட வசன நூல்களும் பிறவும் கல்விமரபைப் பல் வகைகளிலும் நெறிப்படுத்துவனவாக அமைந்தன. முத்துத்தம்பிப் பிள்ளையின் பணிகளை நான்கு வகையான பாகுபாட்டினுள் தொகுத்து நோக்கலாம்.

நூலாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும், வெளியீட்டாளராகவும், பத்திரிகையாளராகவும் விளங்கியதுடன் தனது காலத்துத் தமிழறிஞர்களுடன் தொடர்புகொண்டும் உழைத்தார்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த பலரும் தமிழாராய்ச்சியின் எல்லையில் நின்று பணிபுரிந்த வேளையிற் கல்வியறிவை மாணவர் நிலையிலிருந்து வளர்க்க முற்பட்டவர் முத்துத்தம்பிப்பிள்ளை. பாடாந்தர ஆராய்ச்சியிலோ, சமய சித்தாந்த ஆய்விலோ, இலக்கண இலக்கிய சர்ச்சைகளிலோ பலரும் ஈடுபட்டிருந்த வேளையிலே முத்துத்தம்பிப்பிள்ளையின் பணிகள் எளிமை, செறிவு வரலாற்றுப் பாரம்பரியத்தை உணர்ந்த நிலை ஆதிய பல்வகை எல்லைகளுக்குட்பட்டுத் தமது பணிகளைத் தொடர்ந்தார்.

கல்வி மலர்ச்சி அவாவி நின்ற தமிழ்ச் சமூகத்தின் தேவையை உணர்ந்து செயற்பட்டவர். முத்துத்தம்பிப் பிள்ளை மக்களின்வாசிக்கும்ஆர்வம் உருவாக்க்கியவசன இலக்கிய வளர்ச்சியை உணர்ந்து பின்வரும் நூல்களை வெளியிட்டார். காலக்கிரமப்படி அவர் எழுதிய நூல்களை அவதானிக்கும் ஒருவர் அவரது இடையருத செயற்பாட்டையும் உணர்ந்துகொள்ள முடியும்.

1. காளிதாச சரித்திரம் (1886), 2. இலங்கைச்சரித்திர ஆசனம் (1886), 3 அபிதான கோசம் (1902), 4. பாரதச் சுருக்கம் (1903), 5. நன்னூல் இலகுபோதம் (1904) 6. ஆங்கி ஆங்கில தமிழ் அகராதி (1907), 7. சிவிலியன் தமிழ் இலக்கணம் (1911) 8. யாழ்ப்பாணச் சரித்திரம் (1912), 9. நன்னூல் உதாரண விளக்கம், 10. தென்மொழி வரலாறு (1920)

நாவலர் அச்சுக்கூடத்தின் பின்னணியில் மாணவரின் கல்வித்தேவையை நோக்கி எழுதப்பட்ட இலகுபோத பாலபாடங்களும், பூமிசாஸ்திர, சரித்திர நூல்களும் குறிப்பிடத்தக்கவை. முத்துத்தம்பிப்பிள்ளையவர்களின் உரைநடை செழுமைவாய்ந்தது. காளிதாச சரித்திரத்திலும், பாரதச்சுருக்கத்திலும் கையாண்டுள்ள உரைநடை செந்தமிழ் நடையாகும். பாரதச்சுருக்கம் அக்கால லண்டன் சர்வகலாசாலை தமிழ்ப் பரீட்சைக்குரிய பாடநூலாக அமைந்திருந்தது. தமிழிலே முதன் முதலாக வெளிவந்த கலைக்களஞ்சியமாக அபிதான கோசம் அமைகின்றது. இந்நூல் பதினறு வருடகால அயராத உழைப்பினுல் உருவாகியது என முகவுரையிலே கூறியுள்ளார். தமிழ் இலக்கணம் கற்கும் மாணவர்களின் மயக்கங்களைக் களையும் வகையில் நன்னூல் இலகுபோதம் அமைந்துள்ளது. நூலாதாரம், கர்ணபரம்பரையாதாரம், தமது அறிவாதாரம் ஆதியனவற்றின் துணைகொண்டு எழுதிய இலங்கைச் சரித்திரம், யாழ்ப்பாணச்சரித்திரம் ஆதின பிள்ளையவர்களின் வரலாற்றுணர்வைக் காட்டுவன. சமூக முன்னேற்றத்திற்கு வரவாற்ருய்வும், உணர்வும் எத்துணை அவசியம் என்பதை உணர்ந்து தமது ஆய்வறிவிற்கேற்ப இலங்கை வரலாற்றையும், யாழ்ப்பாண வரலாற்றையும் தமிழ் மக்களுக்கு அக்காலத்திலேயே உணர்த்த முற்பட்டவர் முத்துத்தம்பிப்பிள்ளை.

பிள்ளையவர்கள் எழுதிய தென்மொழி வரலாறு 1920 ம் ஆண்டு அவரது சகோதரர் வீரசிங்கம்பிள்ளையவர்களால் வெளியிடப்பட்டது. இலக்கிய வரலாற்றைக் காலமுறை வகுக்க முற்பட்டு எழுதமுனைந்த பிள்ளையவர்களின் கருத்துக்கள் இக்காலத்தில் ஏற்க முடிந்தனவாயினும் அவரது முயற்சியின் தன்மை ஈண்டு மனங்கொள்ளத்தக்கது.

(9ம் பக்கம் பார்க்க)

கடிதம்

## மும்மொழி கட்டாய பாடம் விரும்பத்தக்கதல்ல

மாணவர்கள் சிங்களம், ஆங்கிலம் தமிழ், ஆகிய மும்மொழிகளையும் கட்டாய பாடமாகக் கற்க வேண்டுமென கௌரவ பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு தெரிவித்திருக்கும் யோசனையானது, சரியாகவும் படவில்லை, சாத்தியமானதாகவும் தோன்றவில்லை.

இந்த யோசனை விரும்பத்தக்கதுமல்ல, அவசியமானதுமல்ல. மும்மொழிகளையும் ஒரே சமயத்தில் படிப்பதென்பதை மாணவர்களின் இஷ்டத்துக்கு விடவேண்டுமேயல்லாமல் கட்டாயமாக்கலாகாது. அரசாங்க சேவையில் சேர விரும்புகிறவர்களுக்கு வேண்டுமானுல் மும்மொழிக் கல்வியைக் கட்டாயமாக்கலாம். அப்படியானவர்களுக்கு மும்மொழி அறிவு அத்தியாவசியமாக்கப்படலாம்.

இம்மாதிரி விஷயங்களில் கட்டாயத்தைப் புகுத்துவதன் மூலம் தேசிய ஐக்கியம் என்ற பெரிய நோக்கம நிறைவேறமுடியாது போகலாம். இது மேலும் ஆலோசிக்கப்பட வேண்டிய விஷயம். பொதுமக்களுக்கு முக்கியமான விஷயங்களில் மக்கள் கருத்து கணிப்புக்கு விடப்படவேண்டும் என்று பிரதமர் ஒரு சமயம் கூறுயிருக்கிருர்.

சகல மாணவர்களுக்கும் மும்மொழிகளையும் கட்டாய பாடமாக்கும் விஷயத்தையும் மக்கள் கருத்துக் கணிப்புக்கு விடலாம்.

எஸ். சிவசுப்பிரமணியம்
ஒய்வுபெற்ற சட்டத்தரணி
கொழும்பு.

எண்ணிலே வாழ்வு—4

## தோழமை பூண்டவர் மூன்று எண்காரர்

★ அண்ணன் ★

“கைமாறு வேண்டா
கடப்பாடு மாரிமாட்டு
என்னுர்க்கும் கொல்லோ
உலகு......”

என்ருர் வள்ளுவர். மழை என்ன பிரதிபலனைக் கருதிப் பெய்கின்றது. அப்படி அதற்குப் பிரதியுபகாரம் செய்வதானுல் என்னத்தைச் செய்துவிடமுடியும்? மழையைப் போல பிரதிபலன் கருதாமல், வாழ்விலே தம்மை அழித்து உலகிற்கு தொண்டுசெய்வர் மூன்று எண்காரராகும்.

குருவின் ஆழுகைக்குட்பட்டவர்கள் மூன்று எண்ணின் கீழ் வருபவர்கள். ஒவ்வொரு மாதத்தின் 3, 12, 21, 30-ம் திகதிகளில் பிறந்தவர்கள் மூன்று எண்ணின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்கள். இவர்கள் பெப்ரவரி மாதம் 19-ம் திகதிக்கும், மார்ச் மாதம் 20க்குள்ளாவது, அல்லது நவம்பர் 21-ம் திகதிக்கும் டிசம்பர் 20-ம் திகதிக்குள்ளும் பிறந்திருப்பின் அதிர்ஷ்டத்துக்குரியவர்கள்.

### வாசகர்களது சந்தேகம்

எண்ஜோதிடத்தில் ஆங்கில தேதிகளே கணிக்கப்படுகின்றது. ஒருவர் இரவு 12 மணி 01 நிமிடத்துக்கு பிறந்திருந்தாரானுல், அது அடுத்த நாளே கணிக்கப்படும். குறிப்பாக நவம்பர் மாதம், 21-ந் திகதி நள்ளிரவு 12 மணி 01 நிமிஷத்துக்கு பிறந்திருப்பாரானுல் அவர் நவம்பர் 22-ம் திகதியே சரியான திகதியாகும். இதுமாதிரியான பிழைகளை ஜோதிடர்கள் விடுவதால் சிலர் தமக்கும் எண்ஜோதிடத்திற்கும் சரியான பலன் காட்டப்படவில்லையென குறைகூறிக்கொள்வதுண்டு. இத் தவறை பொதுவாக நாம் காணமுடிகின்றது.

முன்னுள், பிரிட்டிஷ் பிரதமர், சேர் வின்ஸ்டன் சேர்ச்சில், தமிழ் தேசிய இனத்தின் தலைவன் கலைஞர் மு கருணநிதி, உலகில் இந்துசமயத்தை, சர்வதேச அரங்குக்கு புகுத்திய பேரறிவாளர் சுவாமி விவேகானந்தர் போன்ருேர் இந்த எண்ணில் பிறந்தவராவார்.

### தூலாக்கோல்போல்

இவர்கள் உயர்ந்த இலட்சியநோக்குடன் தர்மநியதிக்கு கட்டுப்பட்டு நடக்கும் பண்பாளர்கள். எப்போதும் உண்மையேபேசுவதில் ஆர்வ

(9-ம் பக்கம் பார்க்க)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-45
சந்திரபாபு
கவலை இல்லாத மனிதன்

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
அசோகன் - விஜயகுமாரி
பவானி

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only
THE DIVORCE OF LADY
(Color)

தினசரி மு.ப. 10-30 பி.ப 2-30 6-30, 9-45
மனோஹரா ஜெய்சங்கர்-ஜெய்சித்ரா நடித்த
(யாழ்ப்பாணம்)
கல்யாணமாம் கல்யாணம்
9-11-77
சிவாஜி - ஜெமினி - நாகேஷ் நடித்த
உனக்காக நான் (கலர்)

கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வின்ஸர் சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ்.நகர்) போன்; 7693
நீதிக்கு தலைவணங்கு

கடைசி வாரம்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்) சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
அன்னக்கிளி

சாந்தி யாழ்.நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
இன்று மட்டும்
அக்பர் (தமிழ்) - புதிய பிரதி
நடனங்கள் கலரில்
நாளை முதல்
ஏ. பி. நாகராஜனின் அகத்தியர்

கடைசி வாரம்
ராணி ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

நான்காவது வெற்றி வாரம்!
ராஜா- யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின்
அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா
எம். ஆர். ராதா, கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)




## சிறுகதை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

முடித்த கேசம், நிலவொளியில் பளிச்சிடும் வதனம், வைரமாய் ஜ்வலிக்கும் கண்கள்.

எழுந்து கலசம் சரித்தகையினைப் பற்றின என் கரங்கள்.

விடி நிலவு பகலொளியின் மௌன சங்கமத்தின் பின் உஷத்கன்னி அதன் பின் புதுமை எழுச்சி பாடி எங்கும் கோலோச்சலானள்''—

(3)

"எப்பவோ நடந்து பழைய நினைவும் கதையுமாகப் போனதை இன்றைக்கு எப்படி நினைவில் மீட்டுக்கொண்டு இந்த விதமாக மனதை அலட்டிக்கொண்டீர்கள் கந்தையாண்ணை?'' —கதையைக் கூறி முடித்துவிட்டுக் குறை பாதியாக வைத்த புகையிலைச் சுருட்டை மீண்டும் பற்ற வைத்த சமயமாகக் கந்தையரிடம் வினவினேன். அதற்கு அவர் பின்னேரம் கடைசி வேளைத் 'தாகசாந்தி'க்காக ஒதுங்கிய கொட்டிலில் ஒரு பருவக்குமரி 'அப்பன் பனை சீவப் போய்விட்டான். எப்பெனுக்குப் பொறுத்திருங்கள்' என்று சொல்லி, வீட்டி லிருந்ததைக் கொணர்ந்து வார்த்துக் கொடுத்தாள். அவளைப் பார்த்தது முதலாக, அவள் கையால் ஊற்றியதைப் பருகியது முதலாக பழைய நினைவுகள் நெஞ்சத்தில் துளிர்த்தெழுந்து படமெடுத்து ஆடியதாகச் சொன்னர். இதற்கு மேலும் அவர் கூறியதொரு கூற்றுத்தான் அந்நாள் மேல் மிகுந்த அநுதாபத்தை விருவித்து அவர் நிலைக்காக மனமிரங்கி மனமுருகி கண்களில் நீர் துளிர்க்கும்படியாயிருந்தது.

'உலகத்திலே நடக்காதகாரியமல்ல. நேற்றும் நடந்தது இன்றைக்கும் நடக்கிறதுதான். ஆனல் அது வெல்லாம் அல்லடா தம்பி. அந்த விடி நிலவுப் பொன்மயில் ஆரென்று இன்று வரை என்னல் தெரிந்துகொள்ளக்கூடவில்லை. செல்லப்பா வீட்டிலும் அப்படி ஒரு பருவக்கொடி. அடுத்த மற்ற வீடுகளிலும் வேலன் இளையவன் வீட்டிலும் கூட அதே போல இருந்தார்கள். இன்னும் இதற்குமேல் கோவில் திருவிழா பார்ப்பதற்கென்று அக்கம் பக்கமாக உள்ள அண்டை அயல் ஊர்களில் இத்தனை வீட்டுக்காரருக்கும் உறவு முறையாக இருந்த பெண்களும் பிள்ளைகளும் பல பேர் சில தினங்களாக அங்கு வந்து கூடியிருந்தார்கள். எவளோ ஒருத்தி. யாரோ? அவள் யாரோ? மங்கியதோர் நிலவொளியில் கனவுலகில் நடந்ததோ, ஆசைவலைய திலே அவலமாய் வீழ்ந்தேனே! என்னை அவ்விதமாக அன்றிரா சிக்க வைத்த சித்திராங்கதையை மற்றொரு தடவை கண்களால் பார்க்கவோ நெஞ்சம் கலக்கவோ அல்லது இதுநாள்வரை அவளைக் குறித்து ஒரு வார்த்தை பேசவோ மனதால் நினைக்கவோ கூட, முடியாத மூடுபனியும் மூளி அலங்காரமுமாக எல்லாம் மனத்துயரமாக நடந்து முடிந்ததே என்ற அந்த ஒரு நினைவு எப்பவும் என் மனதை விட்டகலா நினைவாக நின்று ஓரோர் சமயம் சுழன்றுடும். கொட்டிலிலே, தருவின் நிழலிலே கலசம் சரிந்தபோதெல்லாம அந்த நிலாக் கன்னியின் நினைவு முகம் அங்கு ஒரு சமயம் சிரிப்பொலி கலீரிடத் தோன்றி மறையும். இன்னெரு சமயம் எங்கோ ஒரு பனங்காட்டின் மத்தியில் எவனே ஒரு தவசியின் குடிசையில் கிருஷ்ண விக்கிரகத்தின் எழில் ரூபனைச் சிரித்தொழிரும் ஓர் ஆண் குழந்தையைக் கையில் ஏந்தி அடிவானத்தைப் பார்த்து ஏங்கிக் கலங்கி நிற்கும் சகுந்தலைப் பெண்ணுளின் தலைவிரி கோலம்......அன்றிரவு கண்கள் உறங்கா—

°° °° °°

எங்கள் வீட்டுத் தெருவாசலில் நின்று காளை கந்தையரின் ஒற்றையிடம் விடைபெற்றுக்கொள்கிறேன்.

அதன்மேல் நகர்ந்து உருளும் வண்டியில் காளை அண்ணரின் உச்சக்குரலிலே பழைய நாள் நாடக மேடைப்பாட்டு ஒன்று எழுந்து அதுவும் தூரத்தூரப் போய் மெல்ல மறைகிறது.

[யாவும் கற்பனை[


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

RIO (Jaffna)
Daily 4 Shows
MURPHY'S WAR
(Western)


பாரபட்சமின்றி சகல

## பாடசாலைகளுக்கும் அபிவிருத்தி உதவி

### திரு. அமிர்தலிங்கம் வாக்குறுதி

மாவிட்டபுரம், வியாழன் காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள சிறியபாடசாலையானலும்சரி பெரிய கல்லூரியானலும் சரி சகலவற்றிலும் நீதியான முறையில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள ஆவன செய்து அவற்றின் வளர்ச்சிக்கு உதவுவேன் என காங்கேசன் துறைத்தொகுதி எம்.பி யும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

மாவிட்டபுரத்தில் நடந்த கூட்டமொன்றில் பேசியஅவர் மேலும் கூறியதாவது:-

பெரிய கல்லூரியென்றாலும் சரி சிறுபாடசாலையானலும் சரி எல்லாம் எமது இளந் சந்ததியினரின் அறிவை வளர்க்கும் நிலயங்களே அவைபோதிய வசதிகளைக் கொண்டு விளங்கினல் தான் மாணவர்கள் முழுமையாக கல்வியைப் பெறமுடியும்.

நான் பல்வேறு பாடசாலைகளையும் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்து பார்த்து வந்தேன். சிலபாடசாலைகளில் பலவருடங்களுக்கு முந்திய மிகப்பழைமையான கட்டிடங்களில் மாணவர்கள் அபாயமான நிலையில் கல்வி பயில்கின்றனர் சிலவற்றில் தகர்ந்து வீழும் நிலையிலுள்ள மண்டபங்களில் மாணவர்கள் கல்வியயில்கின்றனர். இது குறித்து நான் ஆவனசெய்வேன் சகல பாடசாலைகளிலும் நீதியான முறையில் அபிவிருத்திகளை மேற்கொள்வேன் என்ருர்.

## தோழமை...

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

முடையவர். யாராவது சூழ்ச்சிகளில் ஈடுபடுவது தெரிந்திருந்தால் உடனடியாக, அதை வெளியிடுவதில் தயங்கமாட்டாதவர்கள். இவர்கள் தாம் செய்வதையோ, சொல்வதையோ துலாக்கோல்போல் சீர்தூக்கிப் பார்ப்பதில் திறமை படைத்தவர். இவர்கள் தமது சிந்தனைகளை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டு அவை கைகூடும் விசயத்தில் மற்றவர்களுடைய சௌகரியங்களை கவனியாமல் செயல்படுவதால் சத்துருக்களும் விரோதிகளும் அதிகமாகவுண்டு

இவர்கள் செய்யும் காரியங்கள் எல்லாம் பெருந்தன்மை வாய்ந்தனவையாகும். இவர்களை நம்பி யாராவது ஒரு காரியத்தை ஒப்படைத்தால் நம்பிக்கை வீண் போகாதபடி நடந்துகொள்வர். இவர்கள் பிறரை ஆளவும் ஏவலிட்டு வேலைவாங்கவும் தலைமைப் பதவிகளை ஏற்கவும் அதன்படி பிரபல்யமான காரியங்களை செய்வதிலும் வல்லவர். மனிதனுக்கு கர்வம், ஆடம்பரம், தன்னம்பிக்கை, தன்அபிப்பிராயங்கள் சரியானது என வாதிடும் தன்மை அவசியம் என வற்புறுத்துவர், சகல காரியங்களிலும் தீர்க்கமான முடிவுடன் செயல்படுத்துவதில் வல்லவர்.

அடுத்தவர்களுக்காக உழைக்கும்போதே அவர்களது திறமை வெளிப்படும். பிறருக்காகவே உழைப்பதற்கு பிறந்தவர்கள்.

அரசியல்துறைகளில் பிரபல்யம் பெற்றுவிளங்குபவர்களும் இந்த மூன்று எண் காரர்கள். அரசியலில் ராஜதந்திரம் பொருந்தியவர்கள். பிறரிடம அன்புகொண்டு பொதுநலத் தொண்டு மேற்கொள்பவராகவும், சுதந்திரமாக தொண்டு செய்பவரும் இவர்களாவார், ஆராய்ச்சித்துறைகளில் புதிய அமைப்பும் ஆர்வமும் கொண்டு புதிய சாதனைகளைச் செய்பவர் இவர்கள்.

### காதலும் வீரமும்

இந்த எண்காரர்கள் காதல் வயப்படுவதில் வல்லவர். அறிவும் ஆற்றலும். அழகும் நிரம்பிய மனைவி வாய்க்க வேண்டும் என கற்பனை செய்வதில் வல்லவர். காதல்வயப்படுவதில் காதலும் வீரமும் கன்னித்தமிழர்க்கு இருகண்கள் எனப்பகரும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் போல் இவர்கள் வீரம்தோய்ந்த காதலை விரும்புவர்.

இவரது அதிர்ஷ்ட நாட்களான வியாழன், வெள்ளி, செவ்வாய் தினங்கள் நன்று. இத்தினங்களில் 3, 12, 21, 30-ம் திகதிகள் அமையின் நினைத்த கரியங்களில் வெற்றி பெறலாம் முன்னேர் தேடி வைத்த பொருள்கள் இவர்களை வந்தடையும்.

அதிர்ஷ்டம் பயக்கும் நிறங்கள் தாமரை நிறம், வயலட். இவ்வெண்காரர் தங்கமோதிரங்களில் புஷ்பராகம் அணிந்து வருவது நல்லது. இவ்வெண் காரர்கள் 3 9, 3-7 3-2 என்று விதியெண் அமைந்திருந்தல் அதிர்ஷ்டம்.

## நாவலர்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளையவர்கள் அறிஞர்களின் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டமைக்குச் சான்ருக குமாரசுவாமிப்புலவரின் வினைப்பகுத விளக்கம், சேர் பொன்னம்பலம் இராமநாதனின் பகவத்கிதை தமிழ் மொழி பெயர்ப்பு, குமாரசுவாமி ஸ்ரீகாந்தாவின் ஔவையார் நீதிச்செய்யுட்கள், கைலாயமாலை ஆதியன அமைகின்றன.

தமிழில் வெளிவந்த முதலாவது கலைக்களஞ்சியமாகிய அபிதானகோசத்தை வெளியிட்ட முத்துத்தம்பிப்பிள்ளை வசனநடை கைவந்தவல்லாளராவார் அச்சுச்சாதனத்தின் வளத்தைப்பயன்படுத்தி அறிவுலகநதை உருவாக்க முயன்ற இப்பேரியார் நாவலர் வகுத்த சைவப் பாரம்பரியத்தப் பேணிய தமிழ்த்தொண்டராவார்.

# கல்வி அமைச்சில் பலத்த பாதுகாப்பு

கொழும்பு, சனி

கல்வி அமைச்சின் நுழை வாசலில் 'வாயில் சீட்டு' முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சில் பணிபுரியும் சகல ஊழியர்களுக்கும், வாகனங்களுக்கும் இம்முறை அமுல்படுத்தப்பட்டுள்ள அதே வேளையில் பொதுமக்கள் கல்வித் தகவல் பிரிவினூடாக மட்டுமே அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அலுவலர்களைச் சந்திக்க அனுமதிக்கப்படுவார்கள்.

பெறுமதி வாய்ந்த பல பொருட்கள் அமைச்சிலிருந்து திருட்டுப்போனதை யடுத்து பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காகவே இந்த முறை நடைமுறைப்படுத்தப் படுகிறது.

## ரூபா 41 ஆயிரம் பொருட்கள் திருட்டு

'ஸ்ரென்சில்' வெட்டும் ஓர் எலக்ரோனிக் மெஷின், 3 சுவர்க் கடிகாரங்கள், 4 தட்டச்சு இயந்திரங்கள் உட்பட சுமார் 41 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கல்வி அமைச்சிலிருந்து திருட்டுப்போயுள்ளன.

## ஒருவர் கைது

இத்திருட்டுத் தொடர்பாக அமைச்சின் 'கன்ரீனி'ல் வேலை பார்த்த ஹபரதுவவைச் சேர்ந்த முன்னாள் ஊழியர் ஒருவரை கொம்பனித்தெரு பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

அதிகாலையில் ஜன்னலின் ஊடாக இப்பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகபொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருக்கிறது.

## மீட்பு

திருட்டுப்போன பொருட்களில் ரூபா 20 ஆயிரம் பெறுமதியான 'ஸ்ரென்சில்' வெட்டும் மெஷினும், 400 ரூபா பெறுமதிவாய்ந்த சுவர்க்கடிகாரம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன. திருடப்பட்ட பொருட்கள் பின்னச் தரகர் ஒருவருக்கு விற்கப்பட்டன வாம்.

அமைச்சின் பாதுகாப்பு ஏற்பாடுகளால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்கள் குறித்து கல்விஅமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்தின கவலைதெரிவித்திருக்கிறார். (ம-இ)

......

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், சனி

நெடுந்தீவு நெழுவினி விநாயகர் ஆலயமகா கும்பா அபிஷேகத்தை முன்னிட்டு அறிவுப்பொழில் நிறுவனத்தினர் அகில இலங்கைத் திருப் புகழ்மாமன்ற ஆதரவுடன் நடாத்திய சமயஅறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கின்றது.

அன்றையதினம் அறிவுப் பொழில் வெளியீடான ''இந்து நாகரீக வினாவிடை'' என்னும் நூலும் வெளியிட்டு வைக்கப்படும்.

அடுத்தவருடம் சித்திரை மாதம் நடைபெற விருக்கும்: நெடுந்தீவு நெழுவினி விநாயகர் கூட்டுப் பிரார்த்தனைச் சபை மாநாட்டை முனிட்டு கூட்டுப்பிரார்த்தனை சபையாரால் நெடுந்தீவில் உள்ள பாடசாலைகள் மத்தியில் சைவசமய பாடப் பரீட்சை நடாத்தப்படவிருக்கின்றது.

அறிவுப் பொழில் நிறுவனத்தினரின் ஆதரவுடன் அகில இலங்கை ரீதியில் சமய அறிவுப் போட்டி ஒன்றும் இம் மாநாட்டையொட்டி நடத்தப் படவிருக்கின்றது. (உ)

......

# தொழிலாளர் பிரச்னைகளை ஆராய்ந்தார்

மாவிட்டபுரம், சனி

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அசோகா சோமரத்தின காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு விஜயம் செய்து. தொழிலாளர்களது பல்வேறு பிரச்சனைகள் குறித்தும் ஆராய்ந்துள்ளார்.

செவ்வாய்க்கிழமைதொழிற்சாலைக்கு விஜயம் செய்த தலைவர் சனிக்கிழமை வரை இங்குதங்கியிருந்து பகுதி பகுதியாக தொழிலாளர்களது பிரச்னைகளை ஆராய்ந்து அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்தார்.

தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிற்சங்கப்பிரதிநிதிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கரத்தினம் தியாகராசா

கந்தர்மடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற த. தியாகராசா அவர்களின் அருமை மனைவியும், பரமானந்தராசா (முன்னைய கிராம சபைத் தலைவர், கோப்பாய்), இராஜேஸ்வரி (ஆசிரியை இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்), யோகேஸ்வரி (ஆசிரியை, நல்லூர் சாதனை பாடசாலை). இந்திரேஸ்வரி, சண்முகராசா (லண்டன்). மகேஸ்வரி (இந்திய தூதுவர் அலுவலகம்), பரமேஸ்வரி (குட்ஜெஸ்ற் கொன்வென்ற், நுவரெலியா) ஆகியோரின் அருமைத் தாயாரும், முருகரத்தினம், சபாரத்தினம். மயில்வாகனம், கணேசமூர்த்தி, பாலசிங்கம், பாலேஸ்வரி, பவானி (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியாரும். திருமதி வனிதலட்சுமியம்மா மகேஸ்வரன் (வனிதா) அவரின் சிறியதாயாருமான தங்கரத்தினம் அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-11-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பலாலி வீதி 6-ம் ஒழுங்கை 6-ம் இலக்க இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன் மணலுக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றாரும், உறவினரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

7692

பருத். முன்னாள்

# நகரசபை தலைவர் சுகவீனம்

நெல்லியடி, சனி

பருத்தித்துறை நகரசபை முன்னாள் தலைவர் திரு. ந. நடராசா நோய்வாய்ப்பட்டு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரான இவரை, இவரின் ஆதரவாளர்களும் அனுதாபிகளும் சென்று பார்த்துவருகின்றனர்.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் பருத்தித்துறைத் தொகுதி அமைப்பாளராக இருந்த இவர் கடந்ததேர்தலில் சுயேட்சை அபேட்சகராக போட்டியிட்டது வாசகர் அறிந்ததே.

# தமிழ்நாடு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளக்கத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேலும் ஒருவர் மரணம்

திருமதி காந்தி தமிழ்நாடு வந்தபொழுது நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது பொலிஸ் சுட்டதில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த வாலிபர் ஒருவர் நேற்று மரணமானார். இவருடன் பொலிஸ் சுட்டதில் மரணமானவர் தொகை மூன்றாக உயர்ந்துள்ளது.

காவலிலுள்ள தி.மு.க. தலைவர்களை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று மதுரையில் ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் ஒரு பெண் உட்பட 16 பேர் கைது செய்யப்பட்டனர். இதற்கு முன்பும் 13 பேர் மறியல்செய்தமைக்காக கைது செய்யப்பட்டனர்.

## ஜனதா தலைவர் அறிக்கை

காவலில் வைக்கப்பட்டுள்ள தி. மு. க. தலைவர்களையும் மாணவர்களையும் விடுதலை செய்யுமாறு ஜனதாகட்சியின் வேலூர் மாவட்ட தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். வன்முறைகளை அவர் வன்மையாகக் கண்டித்திருப்பதுடன், இதனால் பெருமளவில் பொதுச் சொத்துக்கள் நஷ்டமடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## பெங்களூரிலும் கறுப்புக்கொடி

பெங்களூரில் நேற்று முன்னாள் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி ஒரு கூட்டத்தில் பேசவந்தபொழுது கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது. மார்க்ஸீய கம்யூனிஸ்ட்களும், தி. மு. க. வினரும் இந்த கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு பொலிசார் தடியடியும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் பிரயோகித்தனர். பொலிசார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசியதில் 24 பொலிசார் காயமடைந்தனர்.

இதை அடுத்து இங்கு கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றிற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.



'ஈழநாடு' நடாத்திய தேர்தல் போட்டியில் 2-வது பரிசுத் தொகை 500 ரூபாவை திருநெல்வேலி சைவ வித்தியாலய ஒழுங்கையைச் சேர்ந்த திரு. வி. சிவானந்தனுக்கு பின்வருவோர் வழங்கிய பரிசுத்தொகையை அவர்களின் சார்பில் எஸ். ரி. ஆர். பீலிம்ஸ் அதிபர் திரு. எஸ். தியாகராசா வழங்குகிறார். நடுவில் 'ஈழநாடு' நிர்வாக அதிபர்களில் ஒருவரான திரு. ஆர். இராஜலிங்கம் காணப்படுகின்றார். பின்வருவோர் இப்பரிசுத்தொகையை வழங்கினார்கள். யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் திரு. எல். நேசையா, எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. எஸ். தியாகராஜா, மில்க்வைற் ஸ்தாபன அதிபர் கே. கனகராஜா, யாழ். ரோமு ஸ்தாபனத்தார்.

வடபகுதியில் தொல்பொருள் அகழ்வு:

# உயர் அதிகாரிகள் இன்று யாழ். வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அண்மையில் அல்லைப்பிட்டியில் 10 ம் நூற்றாண்டின் சீன மட்பாண்டங்கள் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து வடபகுதி தொல் பொருள் அகழ்வு சம்பந்தப்பட்ட விவகாரங்களை நேரில் கண்டறியும் பொருட்டு புதைபொருள் திணைக்கள ஆணையாளரும், கலாச்சாரஅமைச்சின் செயலாளரும் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ் வரும் புதைபொருள் திணைக்கள ஆணையாளர் டாக்டர் ராஜா.டி சில்வாவும், கலாச்சார அமைச்சின் செயலாளர் திரு சனின்.ரத்நாயகாவும் தொல் பொருள் துறை சம்பந்தப்பட்ட விவகாரங்களில் முக்கிய கவனம் செலுத்துவதோடு அல்லைப்பிட்டியில் 10 நூற்றாண்டின் சீன மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்ட இடங்களையும் நேரில் கண்டறிவார்கள். (இ)

# கூட்டுறவு, தனியார் துறைக்கு நூல் இறக்குமதி அனுமதி

கொழும்பு, சனி

துணி உற்பத்தியில் ஈடுபட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனியார் துறையினருக்கும் இனிமேல் வெளிநாடுகளில் இருந்து நூல் இறக்குமதி செய்ய அனுமதி வழங்குவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உள்ளூரில் கிடைக்கக்கூடிய நூல்வகைகள் தவிர்ந்த மற்றைய நூல்வகைகளையே இவர்கள் இறக்குமதி செய்யலாம் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதே சமயம் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியன புடவை உற்பத்திக்கும் நூல் இறக்குமதிசெய்வதற்கும்கடன் வழங்க முன்வந்துள்ளன (இ)

# கிணற்றில் தவறி விழுந்து மரணம்

மாவிட்டபுரம், சனி

மூளைக்கோளாறுால் பாதிக்கப்பட்டிருந்த பிரமச்சாரி ஒருவர் கிணற்றினுள் தவறி வீழ்ந்து மரணமானார்.

பன்னாலையைச் சேர்ந்த மயில்வாகனம் கனகசபை (38 வயது) என்பவரே இவ்வாறு மரணமானார்.

இம்மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தப்பிராசா விசாரணை நடத்தியசமயம் காலமானவர் தாய்தந்தையற்ற அநாதையென்றும், மூளைக் கோளாறுடைய அவர் திருமணம்செய்யாமல் பிரமச்சாரியாகவே தமது சகோதரியுடன் வசித்துவந்ததாகவும் தெரிய வந்தது. கிணற்றடிக்குச் சென்ற அவர் கிணற்றினுள் தவறிவீழ்ந்ததாகவும் பின்னர் பிணமாக மீட்கப்பட்டதாகவும் சாட்சியங்கள் தெரிவித்தன.

விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர்.

# புதிய வரவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மலிந்து காணப்படுகிறது என்றும் இக்குறைகள் நீக்கப்பட்டு மக்களுக்கு அதிகபட்ச சேவை அளிப்பதே இந்த அரசின் நோக்கம் என்றும் கூறினார். (இ)

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெள்ளோசில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka